விலை சதம் 50 ★ பக்கங்கள்—8

மாணவ மாணவிகளுக்கு
ஓர் நற்செய்தி
நாலுவித
கணித வாய்ப்பாட்டுப்
புத்தகத்தை
இலவசமாகப் பெற்றுக்கொள்ள
அண்ணா தயாரிப்பின்
வெற்றுப்பக்கெட்டுகளை
அனுப்புங்கள்.
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

ஈழநாடு
வார மலர்
THE EELANAADU VAARAMALAR

ஓர் அறிவித்தல்
மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் மேலுறைகளுடன் விற்பனையாகின்றன. மேலுறைகளைச்சேகரித்து அனுப்பி சிறந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 20 பங்குனி 13 ரபி: ஆகி 16 ஞாயிற்றுக்கிழமை [26—3—78] இதழ் 44

### மக்கள் விடுதலை முன்னணி பதவிக்கு வந்தால்

# எந்த ஒரு தனி மொழியும் அரசகரும மொழியாக இராது

## எந்தமொழியிலும் அரசுடன் தொடர்பு கொள்ளலாம்

### ம. வி. முன்னணி பிரமுகர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

**'மக்கள் விடுதலை முன்னணி (ஜனதா விமுக்திப் பெரமுனை) ஆட்சிக்கு வந்தால் எந்த ஒரு தனி மொழியும் இலங்கையின் அரசகரும மொழியாக இருக்காது: தேசிய மொழிகளான தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்றுக்கும் சம உரிமை வழங்கப்படும்.'**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. லயனல் போபகே அளித்துள்ள விசேட பேட்டியில் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பாகக் கொண்டிருக்கும்கொள்கைகள் பற்றி விரிவானவிளக்கமொன்றை லயனல் போப்பகே அளித்தார்.

திரு. போப்பகே மேலும் கூறியதாவது:

எல்லா அரச ஸ்தாபனங்களிலுமுள்ள மக்கள் பிரதிநிதிகளுடனும் நாட்டில் நடைமுறையிலுள்ள எந்தவொரு தேசியமொழியிலும் தொடர்பு கொள்ளக்கூடிய முறையில் அவற்றின் சமமொழி பெயர்ப்பு எல்லாத் தேசிய மொழிகளிலும் வழங்கப்படும்.

எல்லாச் சட்ட விதிகளும் அரசபணிப்புகளும் எல்லாத் தேசிய மொழியிலும வெளியிடப்படும்.

**கல்வி உரிமை**

கல்வி நிலையங்களில் மாணவர்கள் தாய்மொழியிலோ அல்லது தாம் விரும்பும் ஏதாவதொரு தேசியமொழியிலோ கல்வி பெறும் உரிமை ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்துடன் தமது தாய்மொழியில் அல்லது தாம் விரும்பும்ஏதாவதுதேசிய மொழியில் தொடர்புகொள்வதற்கான உரிமை அங்கீகரிக்கப்படும்.

மொழி வேறுபாட்டின் மேல் சமூக, பொருளாதார அரசியல் அல்லது வேறு எந்த வகையிலுமான வேறுபாடு, எந்தவொரு பிரஜைக்கும் காட்டப்படமாட்டாது.

**குடியேற்றம்**

இன அடிப்படையில் அரசாங்க குடியேற்றங்கள் எது

[8-ம் பக்கம் பார்க்க]



பிரான்ஸ் நாட்டு மங்கையான செல்வி மேனகா கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பரதநாட்டிய விருந்தளித்தும் பலரையும் பிரமிப்படையச்செய்தார். ரசிகர்களின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் நன்றி தெரிவித்துப்பேசினார்.

## மரண தண்டனையை எதிர்த்து பூட்டோ அப்பீல்!

### நஞ்சூட்டிக் கொலை செய்ய சிறையில் முயற்சியாம்

கராச்சி, மார்ச். 25

பாகிஸ்தான் முன்னாள் பிரதமமந்திரி ஜனாப சுல்பிகார் அலி பூட்டோ தமக்கு அளிக்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து லாகூர் உயர் நீதிமன்றத்தில் இன்று அப்பீல் தாக்கல்செய்தார்.

சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் தமது அரசியல் எதிரி ஒருவரின் தந்தையைக் கொலைசெய்ய தூண்டியதாக குற்றச் சாட்டின் மீது ஜனாப் பூட்டோவுக்கும் மற்றும் நால்வருக்கும் லாகூர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்தே இப்பொழுது அவர் உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்துள்ளார்.

தமக்கு மரணதண்டனை விதித்த நீதிபதி பாரபட்சத்துடனும் துவேஷ மனப்பான்மையுடனும் இத்தீர்ப்பை வழங்கியுள்ளார் என்று ஜனாப் பூட்டோ தமது மனுவில் கூறியுள்ளார்.

**கொலை செய்ய சதிநடந்ததாம்**

இதற்கிடையில் ஜனாப் பூட்டோவை சிறையில் வைத்தே நஞ்சூட்டிக்கொலை செய்வதற்கு சதி நடப்பதாக வேகம் பூட்டோ குற்றம் சாட்டியுள்

(8ம் பக்கம் பார்க்க)

அக்டெலிக் 50 EC




உங்கள் மிளகாய்ச் செடியை
இலைச்சுருள் நோயிலிருந்து
காப்பாற்ற
அக்டெலிக் 50 EC
பாவியுங்கள்
இது சல்பர் இல்லாமலே
இலைச்சுருள் நோயைக்
கட்டுப்படுத்தவல்லது
தரோருலிமிட்;
32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7651.

## கல்வி அமைச்சரின் புதிய திட்டம்

# 'மாணவர் ஆசிரியர் மத்தியில் புதிய எழுச்சியை ஏற்படுத்தும்''

(சங்கானை)

''விஞ்ஞானம் ஒவ்வொரு பத்து வருடத்திலும் இருமடங்காக வளர்ச்சியடைகிறது. கல்வியிலும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. புதிய முறைகள் கல்வித்துறையில் புகுத்தப்படுகின்றன. இவற்றை நல்ல முறையில் மாணவர்களுக்குப் போதித்து சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் நல்லபயனைக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் தாங்களும் படித்தே போதிக்க வேண்டும்.''

இவ்வாறு வடமாநில கல்வி அதிபதி திரு. த. மாணிக்கவாசகர் பண்டைத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு பாடசாலையின் சகல துறைகளையும் பார்வையிட்ட பின்னர் ஆசிரியர் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா தலைமையில் வடமாநில கல்வி அதிபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது மாணவர்களின் ஒழுக்கம் நேரம் தவறாமை, அறிவு வளர்ச்சி ஆசிரியர்களின் முன்மாதிரியான சேவையிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் நேரத்திற்கு வந்து பாடசாலை நேரத்தில் மட்டும் கற்பிப்பதோடு நில்லாது பாடசாலையில் சேவை செய்வது விரும்பத்தக்கது.

''புதிய கல்வி அமைச்சர் கடந்த கால வரலாற்றில் இல்லாத புதியமுறை ஒன்றை செயல் படுத்துகின்றார். இது மாணவர், ஆசிரியர், கல்வி அதிகாரிகள் போன்றோரிடத்து புதிய எழுச்சியை ஏற்படுத்தும் அவருடைய புதிய திட்டத்தில் உள்ள சிறப்பு அம்சமொன்றை இங்கு குறிப்பிடுகிறேன். கல்வி அதிபதிகள் மாதத்தில் பத்து நாட்களுக்குக்குறையாமல் தனது பகுதிபாடசாலைகளுக்கு விஜயம் செய்து பாடசாலை நடைமுறைகளை ஆராய்ந்து குறைபாடுகளைத் திருத்த ஆலோசனை வழங்க வேண்டும் இதேபோல் பிரதம கல்வி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் வட்டாரக்கல்வி அதிகாரிகள் ஆகியோரும் பாடசாலைகளுக்குச் சென்று புதிய கல்வித்திட்ட அமுலாக்கத்தை பரிசீலித்து புதிய செயற்பாட்டிற்கு ஆலோசனை வழங்க வேண்டும் மாதாந்தம் இந்தக் கடமையை செய்யத்தவறினால் இவர்களுக்கு அந்த மாதத்திற்குரிய சம்பளம் தடுத்து வைக்கப்படும் இந்த அம்சம் எல்லோரையும் சிறப்பாக சேவையாற்ற இயக்கி கல்வியின் நோக்கத்தையும் பூரணப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இங்கு கடந்த காலங்களில் கடமையாற்றிய அதிபர்களான திருவாளர்கள் சிவஞானம், கார்த்திகேயன் தற்போது கடமைபுரியும் அதிபர் திரு. நாகராசா, போன்றோர் இந்த கல்லூரி வளர்ச்சிக்கு அரிய சேவையாற்றியுள்ளனர் அதேபோல இப்போதுள்ளவர்களும் இனி இங்கு வரும் அதிபர் ஆசிரியர்களும் கடமை புரிவார்களென நம்புகின்றேன்.

பிரதம கல்வி அதிகாரி திரு. இ. ஆர். இராமநாதன் உரையாற்றுகையில் இக்கல்லூரியின் விவசாயத்துறை, மரவேலைப்பகுதி, மனையியற் பகுதி ஆகியவை சிறந்த வகையில் செயற்பட்டு வருவது பாராட்டத்தக்கது. எதுவித அறிவித்தலுமின்றி நாம் இன்று இங்கு விஜயம் செய்த போது மாணவர் ஒழுக்கம், கட்டுப்பாடு, மற்றும் பாடசாலைச் செயற்பாடுகள் ஒழுங்காவும் திருப்தியாகவும் நடைபெறுவதை நேரில் அறிந்து கொண்டோம். இது தொடர்ந்து சிறப்பாக இயங்க வேண்டும் என்றார்.

---

## வான் விபத்தில் ஈழநாடு ஊழியர்கள்

அண்மையில் ஒரு வைபவத்துக்குப் போய்த் திரும்பிக் கொண்டிருக்கையில் ஏற்பட்ட வான் விபத்தில் ஈழநாடு ஊழியர்கள் பலர் காயமடைந்தார்கள்.

வெளிக்காயமின்றி சிலர் தப்பிவிட்டாலும் உள்காயங்களுக்கும் அதிர்ச்சிக்கும் ஆளாகாமல் எவரும் தப்பவில்லை.

கடுமையாகக் காயமடைந்தவர்கள் அனைவரும் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்கள். இவர்களில் இயந்திர இயக்குனர் திரு. சின்னையாவும், அச்சகப் பகுதியைச் சேர்ந்த சிவபாதமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களாவர். இப்பொழுது திரு. சின்னையா மாத்திரமே ஆஸ்பத்திரியில் இருந்துவருகிறார்.

எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட இந்த விபத்தில் வான் 'கிளீனர்' மரணமடைய நேர்ந்தது பெரும் துரதிருஷ்டம்.

ஆசிரியர்பகுதியில் திரு. சபாரத்தினமும், திரு. மகாதேவாவும் காயமடைந்தனர். திரு. சபாரத்தினம் தலையில் பலத்த காயமுடனும், மகாதேவா சிறு காயங்களுடனும் திரு. மாணிக்கம் உள்காயங்களுடனும் தப்பினார்கள்.

இந்த விபத்து பற்றிய செய்தி யாழ். நகரில் பரவிய வுடனேயே பல அன்பர்கள் அடிக்கடி டெலிபோன் செய்து மிக அக்கறையோடு நிலைமையைப்பற்றி விசாரித்தார்கள். தூர இடங்களில் இருந்தும் அன்பர்கள் கடிதமூலம் அனுதாபத்துடன் எழுதிக் கேட்டிருக்கிறார்கள்.

உயிர் ஆபத்தின்றி ஈழநாடு ஊழியர்கள் தப்பியதற்கு இவ்வாறான வாசகர்களதும் அன்பர்களதும் ஆசியும் இறைவனின் கருணையும்தான் காரணம்.

விபத்து நிகழ்ந்த வேளையில் அவ்வழியாக வந்த இ. போ. ச. பஸ் சாரதியும், நடத்துனரும் செய்த உதவிகளையும் காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறையையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல கார் உதவிய முன்னாள் இ. போ. ச. பொறியியலாளருக்கும் நன்றி பாராட்டவேண்டும்.

ஆஸ்பத்திரியில் ஊழியர்களும், அதிகாரிகளும் டாக்டர்களும் மிகவும் அக்கறையோடு 'ஈழநாடு' ஊழியர்களைக் கவனித்தார்கள் என்பதையும் மறக்கமுடியாது

இவர்கள் அனைவரும் எமது நன்றிக்கு உரியவர்களாவர்

'பேனா'


### வெல்டிங் பயிற்சி நிலையம்

B. M. C. லேன், மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்.

வயறிங், றேடியோ மெக்கானிசம், பைப் பிற்றிங், எலக்றிக் வெல்டிங், தையல் வேலை முதலியன சிறந்த முறையில் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்களால் இருபாலாருக்கும் குறுகிய காலத்தில் பயிற்சி அளிக்கப்படும். வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு முன்உரிமை.

இயக்குநர்
என். ஞானசேகரம்

8872


### நன்றி நவிலல்

#### சண்முகம் கனகரட்ணம்

சங்கானையைச் சேர்ந்த சண்முகம் கனகரட்ணத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச்செய்தி, மலர்வளையம் அனுப்பியவர்களுக்கும், மற்றும் ஒத்துழைப்பு நல்கியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி கனகரட்ணம், ஷிறாணி, வரலக்ஷிமி, வரராஜன், கே. பி. ரவீந்திரகுமார்

''சண்முகவாசா''
தேவாலய வீதி, சங்கானை.

8811


### தேவை

மில்லில் வேலைசெய்வதற்கு கூலியாட்களும் கங்காணியும் தேவை கூலி நாளொன்றுக்கு ரூபா 15/- வீதம் (பதினைந்து ரூபா) கொடுக்கப்படும். தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு இலவசமாக தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும். நேர்முகமாக அடையாள அட்டையுடன் வரவும். வரும் நேரம் காலை 7 மணி முதல் 9 மணிவரை. முன்பு மில்வேலை செய்தவர்களுக்கும், மில்வேலை தெரிந்தவர்கட்கும் முதலிடம் கொடுக்கப்படும்.

பரமசிவம் அரிசி ஆலை

கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில்.

8828

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

வெளிநாட்டு முட்கம்பி (வேலி) 2 அந்தர் விற்பனைக்குண்டு. பார்வையிடலாம். 3 றக்கா லேன், யாழ்ப்பாணம். 8858

வைத்திய அதிகாரி பாவித்த நாலாவது உரிமையான E L 7000 வோக்ஸ்வேகன் கார் விற்பனைக்குண்டு. நல்ல நிலைமை. பார்வையிடுதல்: சிவாணி கிளினிக், வல்வெட்டித்துறை. 8859

டொஜ் லொறி இலக்கம் C Y 6445 அண்மையில் எஞ்சின் வேலையுடன் 10,000/- வரை செலவுசெய்தது. விலை 18,000/-க்கு மேல். விபரங்களுக்கு: ஜவ்னு மோட்டர்ஸ், பெருமாள்கோவிலடி, யாழ்ப்பாணம். 8861

கோண்டாவில் கிழக்கில் 7 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு. கீழ்க்கண்ட விலாசத்துக்கு நேரில் அல்லது தபால்மூலம் தொடர்புகொள்ளவும். F. சீவரட்ணம், 11 A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டிக்குளி. 8862

3 கிலோ வாற்ஸ், 220 வோல்ட் ஜெனரேற்றர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: குருபாவா ஆச்சிரமம், 47 பரங்சால்வீதி, யாழ்ப்பாணம். 8866

நீர்வேலி கேரோலிவத்தை ஒழுங்கையில் மூன்றுவதாக அமைந்துள்ள $8\frac{1}{4}$ பரப்புக் காணியும், புதியவீடும், தனிக் கிணற்றுடன்விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். S. ஆனந்தன், தச்சர் மடத்தடி ஒழுங்கை, நீர்வேலி 8868

கிளிநொச்சி இரண்டாம் பரவிப்பாஞ்சான் ஒழுங்கையில் வாய்க்கால் ஓரமாக ஒரு ஏக்கர் மேட்டுக் காணியும், 1800 சதுர அடியில் அமைக்கப்பட்ட வீடும் விற்பனைக்குண்டு. உறுதிக்காணி ஏப்ரல் 3-ம் திகதிக்கு முன் அல்லது 25-ம் திகதிக்கு பின் தொடர்பு கொள்க. எல். ஆர். வேதநாயகம், கிழக்கு ஒழுங்கை, உடுவில். 8869

### தேவை

ஸ்ருடியோ வேலையில் அனுபவமுள்ள இருவர் தேவை. நேரில் வரவும். குயின்ஸ் போட்டோ, நல்லூர் மார்கட், கல்வியங்காடு. 8841

பிடவை வியாபார அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் நேரில் வரவும். த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், புதிய மக்கள்சந்தை, யாழ்ப்பாணம் 8831

கார், வான் ஓட்டுவதில்குறைந்தது பத்து வருட அனுபவமும், திடகாத்திரமும் உள்ள சாரதி உடன் நியமனத்திற்கு தேவை. வயது சுமார் 45 வரை இருத்தல் விரும்பத்தக்கது. எல்லாப் படிகளும் உட்பட சம்பளம் ரூ.250/-ம் வேறு சலுகைகளும் உண்டு. நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். ஓட்டோஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 8865

ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழில் கூட்டுஸ்தாபனத்தின் தயாரிப்பான ''ஜனதா பீடி'' சுற்றுவதில் அனுபவமுள்ள, பழக விரும்பும் பெண்பிள்ளைகள் எம்முடன் தொடர்பு கொள்க. அரியகுணராசா, இருப்புமதவடி, வதிரி, கரவெட்டி. 8819

### தேவை

தேங்காய் எண்ணெய் பிழியும் இயந்திரம் (Expeller) திருத்தவும் அதனை இயக்கவும் கூடிய அனுபவமுள்ளவர் [Operater] அத்துடன் எமது ஆலையில் வேலைசெய்வதற்கு ஆலை ஊழியர்களும் தேவை. விண்ணப்பிக்கவும்; முகாமையாளர், சி. எஸ். கே. ஓயில் மில்ஸ், 11, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 8791

யாழ்ப்பாணம் பஜாரில் பல சரக்குக் கடைக்கு விற்பனையாளர்கள் தேவை. மனுச்செய்யவும். விளம்பர இல. 8867, மே/பா ஈழநாடு காரியாலயம், யாழ்ப்பாணம். 8867

ஊதுபவர்கள் (Blowers) உதவியாளர் (Gatheres), குமிழர் (Bubblers), கரிகேயஸ் (வேலைபழகுபவர்) உடனடியாகத் தேவை. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை 25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8842

இரண்டு அல்லது மூன்று அறை கொண்ட நவீன வசதிகளுடன் யாழ் நகரில் அன்றேல் இரண்டு மைல் சுற்றளவிற்குள் வாடகைக்கு வீடு தேவை. விபரங்களை கடிதமூலம் அக்னே எஞ்ஜினியேஸ், 135, செனபற்றிக்ஸ் ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அறியத்தரவும். 8839

யாழ். மாநகரசபை எல்லைக்குள் மாம்பழம் சந்தியில் 3 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு. N. U. மூர்த்தி 45, பழுனுவீதி நல்லூர். 8840

ஆங்கிலம், தமிழில் கணக்கு எழுததெரிந்தவர் (Accounts Clerk) தேவை. தட்டெழுத்தும் தெரிந்திருத்தல் அவசியம்: முன் அனுபவம் மற்றும் தகைமைகளை குறிப்பிட்டு, நற்சான்றிதழ்ப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8838 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 8838

### கல்வி

சிவா கல்வி நிலையம், 71, அரசடிவீதி நீராவியடி G. C. E. (O. L) ஆவணி 78 பரீட்சை விஞ்ஞான வர்த்தக கலைவகுப்புக்கள். 1-4-78 இல் ஆரம்பிக்கவுள்ளன. 8849


## தமிழ் இளைஞர் பேரவை புனரமைப்பு

(நெல்லியடி)

உடுப்பிட்டித்தொகுதியில் தமிழ் இளைஞர் பேரவையை புனரமைப்புச் செய்யும் முதற்கட்டமாக இளைஞர் பேரவைக் கிளைகளை கிராமந்தோறும் நிறுவுவதற்கு ஐவர் கொண்ட அமைப்புக்குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி கனக மனோகரனை உள்ளடக்கிய இந்த அமைப்புக்குழுவின் இதர அங்கத்தவர்களாக செ. செந்துராசா, பொ. தியாகராசா கா. யோகேந்திரகுமார் இ. மகேந்திரன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மாவை சேனாதிராஜா உடுப்பிட்டி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் ஆகியோர் முன்னிலையில் இந்த அமைப்புக்குழு தெரிவு செய்யப்பட்டது.

நெல்லியடி காளிகோயிலடியில் உள்ள மாடிக்கட்டிடத்தில் இப்புனரமைப்பு சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## ஈஸ்டர் சிறுகதை

# த ர் த் து ங் ழ உ. புரிகின்றன!

திருமதி
இ. ஜெ. மகேந்திரா

பக்கத்து பெஞ்சில் அமர்ந்திருந்த ரமேஷைப் பார்த்துக் கறுவிக்கொண்டிருந்தான், 'தினேஷ்' என்ற தினகரன்.

''என்ன நினைத்துக்கொண்டான் இவன். இந்த முறை போகட்டும் இவனுடைய கொட்டம் அடங்கிவிடும்''- தனக்குள்ளே அவன் குமுறுவதை அவன் கண்களில் ஒளிவிடும் சினம் எடுத்துக் காட்டியது.

விஞ்ஞான பாடம் நடந்துகொண்டிருந்து. 'மின் தாக்கம்' குறித்து விளக்கம் கொடுத்துக்கொண்டிருந்தார் இரசாயன ஆசிரியர்.

வகுப்பிலேயே கவனம் செலுத்தாமல், கைகளைத் திருகுவதும், கண்களை வெட்டிவெட்டி ரமேஷை நோக்குவதுமாக இருந்த அவன் செய்கையை, பக்கத்தில் இருந்த காதர் கண்டுபிடித்துவிட்டான். பாடம் முடிந்தது. கடைசிப் பாடமாக அது இருந்தமையால் வீடு செல்வதற்கு எல்லோரும் தங்களை ஆயத்தப்படுத்தினர். ரமேஷையே வெறித்து நோக்கியபடி தன் புத்தகங்களை அடுக்கிக்கொண்டிருந்த தினேஷை அணுகினான் காதர். ''தினேஷ் என்னடா? ஏதோ வாய்க்குள் முணு முணுத்துக்கொண்டிருக்கிறாயே. போன பாடத்திலேயும் கவனித்தேன். ஆசிரியரைப் பார்ப்பதைவிட்டுவிட்டு ரமேஷையே பார்த்தபடி இருந்தாயே, என்ன நடந்தது? ஒரு பாடநேரம் முழுவதும் தினேஷின் செய்கையையே அவதானித்தபடி இருந்த காதர், ஆவலோடு கேட்டான். காதரும், தினேஷும் வெவ்வேறு மதத்தவர்களாக இருந்தாலும் அன்பு என்ற பாசக் கயிற்றால் கட்டப்பட்டவர்கள். காதரின் இனிய பண்பினால் தினேஷ் கவரப்பட்டவன். காதரின் கேள்விக்குப் பதில் சொல்லு முன்பே அவன் கண்களை நீர் திரையிட்டது. பதறிப்போன காதர், தினேஷின் கைகளை இறுகப்பற்றியபடி ''என்னடா நடந்தது? எனக்குச் சொல்ல மாட்டாயா?'' என்று வினவினான்.

கண்களில் வழிந்த நீரைச் சுண்டியவாறு ''உனக்கு சொல்லாமலா? இவன் ரமேஷ் மிகவும் பணத்திமிர் பிடித்தவனாக இருக்கிறானடா. கடந்த வாரம் எங்கள் ஆலயத்தில் எங்கள் சிறுவன் ஒருவன் புதிய ஆடை அணிந்துவந்திருந்தான். அவனுடைய ஆடையைப்பற்றி நாங்கள் எல்லாரும் எங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்தபடி வந்தோம். நானும் ஏதோ சொல்லத் தொடங்க, இவன் என்ன சொன்னான் தெரியுமா? 'இவனுக்கென்னடா புது உடுப்பைப்பற்றித் தெரியும். போன நத்தாருக்கு இவன் போட்ட புதுஉடுப்பை 4 மாதங்களாகப்போடுகிறான்' என்று ஏளனமாகப் பேசினான். எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்!

'எப்படிப்பட்ட அவமானம்' -காதர் குமுறினான்.

'அவன் பணக்காரனடா, அவன் சொன்னது தவறில்லை. ஆனால் என் ஏழ்மையை எல்லோர் எதிரிலும் சுட்டிக்காட்டிவிட்டான். நான் சிறுகச் சிறுகச் சேர்த்துவைத்த பணத்தில் இன்று ஒரு புது ஷேர்ட் வாங்கப்போகிறேன். இந்த முறை ஈஸ்ரருக்கு நான் போடும் புது உடுப்பைப் பார்த்து அவன் வாயைப் பிளக்கவேண்டும். அந்த நேரம் நான் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கவேண்டும். இது தானடா என் ஆசை!'- தினேஷின் ஆத்திரமும் சவாலும் அவன் பேச்சில் தெளிவாகியது.

'நீ கெட்டிக்காரனடா நினைத்ததைச் சாதித்துவிட்டாய்!' காதர் தினேஷின் தோளைத் தட்டிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றான்.

தான் அணியப் போகும் புது உடுப்பையும், அதனால் மறையப்போகும் தனது அவமானத்தையும், தனது தன்மானம் அடையப்போகும் வெற்றியையும் கற்பனையிலேயே பார்த்து மகிழ்ந்தவாறு வீடு நோக்கிச் சென்றான் தினேஷ்.

'தினேஷ்' தேநீரைத் தந்தபடியே பரிவுடன் அழைத்த அன்னையை உற்று நோக்கினான். 'தினேஷ் கண்ணு, உன் பெட்டியிலே கொஞ்சக் காசு சேர்த்து வைத்திருக்கின்றாயே, ஏதாவது புது ஷேர்ட் ஏதோ வாங்கப்போறியாம் என்று உன் அக்கா சொல்கிறாள்.'

'ஓம் அதுக்கென்ன' - அன்னையை முற்றாகப்பேசவிடாமல் தடுத்தான் தினேஷ்,

'ராசா ஈஸ்ரருக்கு முதல், நான் தருவன், அந்தக் காசைத் தாறியே.

'என்ன? 'இடி முழங்கியது போலிருந்தது தினேஷின் குரல். 'நான் கஷ்டப்பட்டுச் சேர்த்திருக்கிறன்; அவவுக்கு என்னுடைய காசுவேணுமாம். நல்ல கதைதான்'- பலமாகக் கத்தியபடி தன் அறைக்குள் சென்றான். அறைக்குள்ளிருந்த அவனையே அக்கா பார்த்தபடி இருந்தாள். அவள் கண்கள் கலங்கியிருந்தன. 'என்னக்கா?' பதறியபடியே அவளை அணுகினான். 'ஒன்றுமில்லை தினேஷ், பக்கத்து வீட்டு முனியனின் மகன் சேகர் மரத்திலிருந்து விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளார்கள். முனியன் சாயங்காலம் இங்கு வந்து ஒரே அழுகையாக அழுதுவிட்டுப் போகின்றான். பிள்ளைக்கு குளுக்கோஸ், பழவகைகள் வாங்கத் தன்னிடம் பணமேயில்லையாம், அம்மாவிடமும் ஒரு சதமுமில்லை, ஏழைகளுக்கு ஏழைதானே உதவி' -அக்கா கலங்கியபடியே கூறி முடித்தாள். 'இனி இவ என்னுடைய காசுக்கு அடி போடுகிறா, நான் தரமாட்டன் என்றால் தரமாட்டேன். அவன் ரமேஷுக்குப் பாடம்படிப்பிக்காமல் விடமாட்டன்.'

வீட்டிலிருந்தால் தொல்லையென்று எண்ணிய தினேஷ் உடுப்பை மாற்றிவிட்டு வெளியில் சென்றான்.

ரமேஷைப் பழிவாங்குவதே அவனது குறிக்கோளாக இருந்ததால், வேறொன்றையும் அவன் சிந்தித்துப் பார்க்கவில்லை. வீதியில் வேகமாகக் கால் போன போக்கில் நடந்தவாறு இருந்தான், கண்களை இருட்டுவதுபோல் ஓர் உணர்ச்சி. எதையாவது ஆதாரமாகக்கொள்ளவேண்டும். இல்லையேல் நிலத்தில் விழுந்துவிடுவான் போலிருந்தது. கண்ணை விழித்துப் பார்க்கும் பொழுது நன்றாகப் பழகிய ஒரு முகம்தான், கண்ணில் முதலில் தென்பட்டது. முதலில் மங்கலாகத் தெரிந்த உருவம் இரண்டாம் தடவை பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரிந்தது. 'தாமஸ் இவன் எங்கே வந்தான். எப்படி நான் இவனின் மடியில் படுத்திருக்கின்றேன்.'

பலவிதமான எண்ணங்களுடன் எழுந்திருக்க முயன்ற அவனை தாமஸின் குரல் தடுத்தது 'என்ன தம்பி எழும்புறீங்க, திடீரெனத் தலையைச் சுற்றி விழுந்திட்டீங்க. நல்லவேளை நான் வந்தது, இரண்டு பேரின் உதவியுடன் உங்களை இந்தப் பக்கமாகத் தூக்கிக்கொண்டு வந்தேன், சோடா வாங்கி வந்திருக்கிறேன் குடியுங்கோ வன்' நா வறண்டுவிட்டதை உணர்ந்த அவனுக்கு ஏதாவது வாயில் விடவேண்டும் போல இருந்தது. சோடாவை வாங்கக் கையை நீட்டினான். கையை நீட்டிக்கொண்டிருக்கும் பொழுதே அவன் சிந்தனையில் ஒரு 'பொறி', தாமஸ் ஒரு 'அன்றுடக் காய்ச்சி' அவனுக்கு சோடா வாங்க ஏது பணம், அப்படியென்றால்? தனது சாப்பாட்டுக்கென்று வைத்திருக்கும் பணத்திலேயா, இதை வாங்கியுள்ளான்.

நினைவே அவன் உள்ளத்தை வாட்டி வதைத்துக் கிளறியது.

'தாமஸ் உன் சாப்பாட்டுப் பணத்திலேயா இதை வாங்கினாய்'

'என்ன தம்பி, ஆபத்து வேளையிலே உதவாத பணம், என்னத்துக்கு? நாமெல்லாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்வதிலே என்னப்பா லாபம்? எமக்காகத் தம் உயிரைத் தந்த இயேசுபிரானின் புதல்வர்களுக்கு இதுகூட நம்மால் செய்யமுடியாவிட்டால் நாமென்ன மனிதர்கள்?'- தாமஸ் பேசிக்கொண்டேயிருந்தான்,

அவனையே உற்றுநோக்கியபடி அவன் அருகாமையிலிருந்தான் தினேஷ். தினேஷின் உள்ளம் வெதும்பியதை, அவன் முகமே எடுத்துக்காட்டியது. வயிற்றையே காயப்போட்டு, இன்னொருவனுக்கு உதவவேண்டும் என்றெண்ணுகின்ற தாமஸ் எங்கே? ஈஸ்ரருக்குப் புது ஷேர்ட் போட்டு ரமேஷை பழிவாங்க நினைத்த தான் எங்கே?

திடீரென அவ்விடத்தை விட்டெழும்பிச் சென்ற தினேஷை ஆச்சரியத்துடன் பார்த்தபடி நின்றான் தாமஸ். திடீரென மனதை அலைக்கழிக்கும் வேதனையான இந்தனைகளால், தன்னை மறந்து செல்லும் தினேஷின் மனநிலை தாமஸுக்கு எங்கே புரியப் போகின்றது.

'அம்மா அம்மா அம்மா! அப்போது கேட்டீர்களே -பணம் இந்தாங்க அம்மா' - தினேஷ் நீட்டிய பணத்தை நீட்டியவாறே இருந்தான், 'ராசா' -பேசமுடியாமல் திணறினாள் அவன் தாய்- 'எனக்குத் தெரியும் எங்களுடைய தினேஷைப் பற்றி. அவனுடைய இரக்க குணம் முடிவில் அவனுடைய ஆசைகளை வென்றுவிட்டது.

''அம்மா வாங்கிக்கொண்டு போய் முனியனிடம் கொடுங்கோ'-பெரிதாகஏதோ கதைத்தபடி நின்றான் தினேஷின் அக்கா பிரியா தாயார் சென்று பணத்தைக்கொடுத்த சில நேரங்களில் முனியனே அங்கு வந்தான். 'தம்பி, தம்பி' இவ்வளவு சின்ன வயதிலே இவ்வளவு பெரிய மனத்துடன் இருக்கின்றீர்களே. உங்களை எப்படிப் பாராட்டுவது.' -நன்றியால் நாத்தழுதழுத்தது. முனியன் தன் கலங்கிய கண்களை துடைத்துவிட்டுக் கொண்டே அவ்விடம் விட்டகன்றான். அன்னையின் முகத்திலோ பெருமிதம், அக்காளுக்கோ தம்பியைப் பற்றிய கர்வம். ஆண்டவா! இத்தனை பெரிய வாய்ப்புக்களை இழக்க இருந்தேனே, நல்லகாலம் எனக்கொரு நல்ல வழியைக் காட்டினீர்-' தனக்குள்ளேயே பேசிக்கொண்டான் தினேஷ்.

விடிந்தது. அன்றுதான் ஈஸ்ரர். தினேஷின் மனதிலே பெரிய அமைதி குடிகொண்டிருப்பதை அவனால் உணரக் கூடியதாக இருந்தது. இன்று கோவிலில் அவன் விட்ட சவாலை அறிந்தவர்கள், புது ஆடையுடன் அவனை எதிர் பார்க்கலாம், அந்த ஆடை அவனை அலங்கரிக்காமல் இருப்பதைக் கண்டு அவனை ஏளனமும் செய்யலாம். அவனுக்கு அதைப் பற்றிய நினைவே இல்லாமலிருந்தது. பணம் இல்லாதவன், பட்டாடை இல்லாதவன் மற்றவர்களெதிரில் நிமிர்ந்து நடப்பதென்பது இயலாத ஒரு காரியம் என்று இதுவரை நினைத்தவனுக்கு, மற்றவனை வாழவைப்பவனே உயர்ந்தவன் என்ற எண்ணம் மனத்தை ஆட்டிக்கொண்டிருப்பதால், மனதார யாரால் மகிழ்வாக இருக்கமுடியும், நிமிர்ந்து நடக்கமுடியும் என்பது நினைவில் எழுந்தது. தன்னையுமறியாமல் தன் நெஞ்சை நிமிர்த்தியபடி நடந்த அவன் கைகளின் அசைவு, இருளை அகற்றி ஒளிக்கு இடம் விடுவதுபோல் தோற்றமளித்தன. ஈஸ்ரர் ஞாயிறு தினத்தில் தன் வாழ்க்கையின் அர்த்தத்தை முற்றாகப் புரிந்து கொண்டதாலேயோ என்னவோ? அவன் முகம்மேலும் பிரகாசமாக விளங்கியது.

கோவில் மணியின் நாதம் வழக்கத்தைவிட இனிமையாக ஒலிப்பதை அவனால் உணர முடிந்தது. தூய்மையான எண்ணங்களுடன் நடந்துகொண்டிருந்த தினேஷின் பாதை நேராகவே போய்க்கொண்டிருந்தது. அதிகம் உணர்ச்சிவசப்பட்டதாலேயோ என்னவோ தினேஷின் கண்களை நீர் திரையிட்டது.

அவன் மனமோ ஒரு ஈஸ்ரர் தினத்தினிலே புதிய ஒரு வாழ்க்கையைப் புரிந்து கொண்ட மகிழ்ச்சியில் நர்த்தனமாடிக்கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

---

### ஒரு விஞ்ஞானக் கண்ணோட்டம்

# இரத்தினக் கற்கள் எவ்வாறு உருவாகின்றன?

எஸ். எஸ். துரைசிங்கம்

கற்கால மனிதன் தன் உணவைப் பெறவும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும் பூமியின் மேற்காணப்பட்ட கற்களையே உபயோகித்தான். காலப்போக்கில் அவன் புத்தி விரிவடைய அவனுக்கு உறுதியானதும் நீடித்து உழைக்கக் கூடியதுமான ஆயுதங்கள் தேவைப்பட்டபோது மண்ணினுள்ள இரத்தினக் கற்களின்பால் அவன் கவனம் சென்றது.

இரத்தினக் கற்களின் கடினத்தன்மையும், அழகானவண்ணக் கவர்ச்சியும் அவற்றை ஆயுதங்களாக மாத்திரமன்றி ஆபரணங்களாகவும் ஆக்கி அணிந்து மகிழ்ந்தான். அதே வேளை அதை அணிவதால் அவனுடைய உளம் உடல் முதலியவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் நன்மை தீமைகளையும் அனுபவரீதியாகக் கண்டறிந்தபோது அது அவனுடைய வாழ்க்கையில் அத்தியாவசியப் பொருளாக மாறியது. அவை அரிதாகவே இப்புவியில் கிடைப்பதால் அதன் பெறும்தியும் நாளாவட்டம் ஏறிக்கொண்டே போயிற்று.

> வைரக்கற்களை மோதிரத்தில்-பதக்கத்தில் வைத்து அணிந்துகொள்ள யாருக்குத்தான் விருப்பமிருக்காது. ஆனால் எல்லாக்கற்களையும் அணிந்துகொள்ளலாமா? கிரகத்துக்கு ஏற்ற வைரங்கள் உண்டு. முதலில் அவைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோமே!

இன்றும் இவை அணிபவர்களுக்கு அழகையூட்டுனவாகவும், அருமருந்துகளாகவும், விஞ்ஞான ஆராய்ச்சியின் முக்கிய பொருட்களாகவும் நுட்பமான இயந்திரங்களின் முக்கிய உறுப்புக்களாகவும், அண்டவெளி ஆராய்ச்சிக்கு அருந்தொண்டாற்றுபவையாகவும் விளங்குகின்றன.

இவ்விரத்தினக்கற்கள் பற்றி சென்ற நூற்றாண்டுவரை விஞ்ஞான ரீதியிலான செய்திகளோ விளக்கங்களோ இருக்கவில்லை. ஆனால் அதுபற்றி தெரிந்து கொண்டவர்கள், அனுபவரீதியாகப் புரிந்துகொண்டவர்கள் அவற்றை இரகசியமாகவும் அதே வேளை வியாபார தந்திரமாகவும் பாவித்தார்கள். ஆனாலும் அதுபற்றிய முழு அளவிலான அறிவு இல்லாத காரணத்தால் அவற்றை அடையாளம் கண்டு கொள்ளும் விதத்திலும், பட்டைதீட்டி மெருகிடுதலிலும் பல்வேறு பிழையும் சரியுமான விளக்கங்களை உருவாக்கி உரிய பலனை அடையமுடியாது போய்விட்டார்கள்,

#### நவீன துறை

இன்று இவற்றிற்கானவிடையாக விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளை இரத்தினக் கற்களில் மேற்கொண்டு நவீன பல உண்மைகளையும், கொள்கைகளையும், விளக்கங்களையும் உருவாக்கி இரத்தினக் கல்லியல் (Gemmology) என்ற ஒரு நவீன துறையையே உருவாக்கியுள்ளார்கள். தொடர்ந்தும் இதுபற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கின்றன. இவற்றில் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் முன்னணி வகிக்கின்றன.

இரத்தினக் கற்களின் விஞ்ஞான உண்மைகளை ஊன்றிக் கவனிக்கும் போது நம் [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)

[இன்று உயிர்த்தெழுந்த ஞாயிறு அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது]

# ஜீவனுள்ள கிறிஸ்து!

வண. எம். ஏ. இரத்தினராஜா

அன்று வெள்ளிக்கிழமை; ஆண்டவர் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார் மூன்று மணிநேர வேதனையின் பின் அவர் உயிர் அவரைவிட்டுப் பிரிந்தது. அவர் உண்மையாகவே மரித்துவிட்டார். அதைத் திட்டமாக நிச்சயப்படுத்தி அறிந்துகொண்டனர் ரோம வீரர். உயிர் பிரிந்த உடல் இறக்கப்பட்டு, இரவற் கல்லறையொன்றிலே அடக்கம் செய்யப்பட்டது.

ஆசாரியரும் வேதபாரகரும் ஆதிக்கம்கொண்ட பரிசேயரும் தமது சத்துராதியான கிறிஸ்துவைத் தொலைத்துவிட்டனர். ரோம ஆட்சியினர், ஒரு புரட்சித் தலைவனைப் புதைத்துவிட்டனர்; அவரை ஏற்காத சகலருமே அவர் மரணத்தைக் குறித்துக் குதூகலமடைந்தனர். பாவிகட்காய்ப் பரிந்து பேச இனிமேல் ஆளில்லை. குற்றவாளிகட்காய் வாதாட இனி ஒரு குரு இல்லை; ஆலய நிர்வாகத்தின் அசட்டுத் தனங்களை எடுத்துக்காட்ட இனி எவருமில்லை; கடவுள் பேரில், மார்க்கத்தின்பேரில் மக்களை ஏமாற்றிய பரிசேய கூட்டத்தவரை "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்" என வெருட்டிப் பேச ஆளில்லை. ஜெப வீடாகிய தேவாலயத்தைக் கள்ளர் குகை ஆக்கிய கூட்டத்தவரை விரட்டியடிக்க ஓர் வீரனில்லை; ஓய்வுநாள அனுசரிப்பு என்றஉழுத்த சட்டத்தை உடைத்து, அதோடு கூடிய கொடிய பிரமாணங்களையும் உடைத்து, மனுஷனை மனுஷனாக, மரியாதையோடும் பண்போடும் வாழவிடப் போராடிய போர் வீரனில்லை.

இவ்விதமான கிறிஸ்துவின் மரணத்தை குறித்து அன்று அநேகர் களிகூர்ந்து ஆர்ப்பரித்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.

ஈரமற்ற மனதுள்ளோர் செய்த அக்கிரமத்தைக் கண்டு பாவிகள்மட்டும் பதறினர்; எளியவர்கள்மட்டும்ஏங்கினர், அவர்கைபட்டுக் குணமடைந்த நோயாளிகள்மட்டுமேநொந்து வாடினர். தாழ்த்தப்பட்டோர் சிறுமைப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர்நெருக்கப்பட்டோர் தங்களை நேசித்த அன்பர் போய்விட்டார் என்று வாடிப் புலம்பினர். அவரை நேசித்த சீஷருமே பயத்தால் ஒளித்துக்கொண்டனர்.

மரித்தாலும், தாம் மூன்றும் நாள் மறுபடியும் எழுதுவிடுவதாக ஆண்டவர் இயேசுகூறிய வார்த்தைகள் அரசாங்கத்திற்கு எட்டியது. கல்லறை வாசலிலே எவரும் புரட்ட முடியாத பாரமான கல் வைக்கப்பட்டுக் கல்லறை மூடப்பட்டது. இறந்தவர் எழுந்து விடுவார் என்ற சந்தேகத்தின் பேரில் இரவும் பகலும் போர் வீரர் காவல்வைக்கப்பட்டனர். இறந்தவர் எழுந்திராதபடி காவல்வைக்கப்பட்டதும் பாரமான கல்லால் மூடப்பட்டு முத்திரையிடப்பட்டதுமான கல்லறை கிறிஸ்துவின் கல்லறை ஒன்றே.

சனிக்கிழமையும் கடந்துவிட்டது, எதுவுமே நடக்கவில்லை. ஞாயிறு அதிகாலை அவரது கல்லறை வாசலில் நின்று சடலத்துக்குரியாதை அளிக்க வேண்டி சில பெண்கள் வந்தனர். வாசலிலுள்ள கல்லை எவர் புரட்டமுடியும் என்ற ஒரே கேள்வியோடு அவர்கள் கல்லறை வாசலை அடைகின்றனர். ஆனால்... இதோ பாரமான அந்தக் கல் புரட்டப்பட்டிருப்பதையும், உள்ளே கிறிஸ்துவின் சடலம் இல்லாதிருப்பதையும் அவர்கள் கண்டனர். திடுக்குற்றனர்; பயந்தனர் "கல்லறையில் வைக்கப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் ஆனால் அவர் தாம் முன் கூறியபடியே உயிர்த்தெழுந்துவிட்டார்' எனத் தேவதூதர்கள் அப்பெண்களுக்குக் கூறினர். திரும்பிப் பார்த்த மரியாள் தன் அருகே நின்று தன்னோடு பேசும் ஜீவனுள்ள ஆண்டவரைக் காண்கிறாள். பாதத்தைத்தொட்டுப் பூஜிக்கப்போகும் அவளை, "என்னை இப்போது தொடாதே" என அவர் தடுத்து வைக்கிறார்.

## பூட்டிய அறையில்

பயத்தினால் கதவுகள்யாவும் பூட்டி அறையுள்ளே ஒளித்திருந்தனர் ஒரு சில சீஷர் பூட்டப்பட்ட அறையின் நடுவில் உயிர்த்தெழுந்த ஆண்டவர் காட்சி அளிக்கிறார். அவர்கள் மேல் அவர் ஊதி, 'உங்களுக்குச் சமாதானம்' என்கிறார். பயந்தவர்கள், கலங்கியவர்கள், நிம்மதியற்றவர்கள், ஆறுதல் அற்றவர்கள், இப்போது வல்லமையான கடவுள் சமாதானத்தைப்பெற்று வீர புருஷராகின்றனர்.

எம்மாவூர் என்னும் இடத்துக்கு இருவர் நடந்துசெல்கின்றனர். வெள்ளிக்கிழமை நடந்த சம்பவத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே போகின்றனர். வாழ்க்கையிலே நம்பிக்கை இழந்தவர்கள்; வருங்காலத்தைக் குறித்துக்கவலைகொண்டவர்கள், ஏமாற்றமும் மன விரக்தியும் அடைந்தவர்கள், இனிச்செய்வது எது எனத் தெரியாது திகைத்தவர்கள், அடுத்தது என்ன ஆகுமோ என அங்கலாய்த்தவர்கள், வழியிலே சடுதியாக மூன்றும் ஆள் ஒருவர் தோற்றுகிறார், கலங்கியவர்களுடன் கலந்து பேசுகிறார். காரியங்களை விளக்குகிறார். அவர்கள் இருதயம் கொழுந்துவிட்டு எரிவதுபோல் ஆகிறது. போசனவேளை அவரை இன்னார் என்று கண்டு உயிர்த்தெழுந்த ஆண்டவரை உளங்களிலே வழிபடுகின்றனர்.

ஆண்டவர் உயிர்த்தெழுந்தார் என்பதை தோமா என்ற சீஷன் நம்பவில்லை கண்டவர்கள் கூறியபோதும் அதை அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் ஒரு நிபந்தனை விதிக்கிறான். அவருடைய காயங்களிலே நான் என் கையைப் போட்டு குத்துண்ட அவர் விலாவிலே என்விரலைப்போட்டுப் பரீட்சித்து அறிந்தாலன்றி அவர் உயிர்த்ததை நம்பமாட்டேன் என்கிறான். இரவுவேளை சீஷர் மறுபடியும்கூடி அறையில் இருந்தபோது அவர்கள் மத்தியிலே தோன்றினார் உயிர்த்த ஆண்டவர். "தோமாவே உன் கையை நீட்டி உன் விரலைப்போடு, பரீட்சித்துப் பார்த்து திருப்தியடைந்துகொள்" என்கிறார். பரீட்சித்த தோமா"என் ஆண்டவரே"என்று அவர் காலடியில் விழுகிறான். "பரீட்சித்தால் ஆண்டவரே என்கிறாய், கண்டால் கடவுளே என்கிறாய். ஆனால் என்னைப் பரீட்சிக்க விரும்பாது விசுவாசத்தால் ஏற்றுக்கொள்பவனே பாக்கியவான்" என்கிறார்.

கிறிஸ்து உயிர்த்து எழுந்தார். அவரை ஜீவனுள்ள கிறிஸ்துவாகக் கண்டவர்கள் புதியதோர் வாழ்க்கையைப் பெற்றனர். என்னசெய்வோம், ஏது செய்வோம், வாழ்க்கையில் குறுக்கே கிடக்கும் கல்லைப் புரட்டுவது யார்? என்ற கேள்வியோடுஇருளிலும்பெலவீனத்திலும் நின்று ஏங்கும் அடியாருக்கு இதோ அந்தக் கல் புரட்டப்பட்டிருப்பதை அவர்கள் கிறிஸ்துவில் காண்கிறார்கள், பயத்திலும் கலக்கத்திலும் வாழ்ந்து வேதனையிலும் தன் பத்திலும் வருந்தி வாழ்க்கையிலே வெறுப்புடனும் கசப்புடனும் வாழ்ந்து மன நிம்மதியும் சமாதானமும் அற்றோராய் இருந்து வாடுவோருக்கு "உலகம் கொடுக்கமுடியாத என் சமாதானத்தை நான் உங்களுக்குத் தருகிறேன்" என்கிறார். அவரை ஏற்றவர்கள், அப்பெரும் சந்தோஷ சமாதானத்தைப்பெற்றார்கள்; இன்னமும் பெற்றுக்கொண்டேயிருக்கிறார்கள்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார். இரண்டாயிரம்

[7ம் பக்கம் பார்க்க]

விசுவமடுவில் ஒரு செல்வாபுரம்

# வெயிலிலும் துயரிலும் வாடும் இருநூறு குடும்பங்கள்!

அவதானி

பரந்தன் — முல்லைத்தீவு வீதியில் பஸ்ஸில் போய்க்கொண்டிருக்கும்போது விஸ்வமடுவில் அந்த அமெரிக்க நீலக் கூடாரங்கள் அடுக்கடுக்காக கூத்தனை அழகாய்த் தெரிகின்றன! கூடாரங்கள்தான் அழகாய்த் தெரிகின்றனவேயொழிய வெயிலினாலும் துயரினாலும் புழுங்கிப்போய் அந்தச் சின்னஞ்சிறிய கூடாரம் ஒவ்வொன்றிலும் எட்டுப் பத்தென்று முடங்கிக்கிடக்கும் மனித ஜீவன்களின் அவலம் யாருக்கும் தெரியாதென்றே தோன்றுகிறது.

விஷப்பாம்புகளும் கொடிய விலங்குகளும் வாழும் பயங்கரக் காட்டுப் பிரதேசத்தின் துப்புரவு செய்யப்பட்ட சில ஏக்கர் நிலங்களில் சுமார் இருநூறு குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருக்கின்றன. இக் குடும்பங்கள் அனைத்தும் ஆவணிக் கலவரத்தில் பாதிக்கப் பட்டவையாகும்.

## நான்கு பிரிவுகளாக...

பாதிக்கப்பட்ட இந்த இருநூறு குடும்பங்களும் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அணித்தணித்தாகத் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்டுள்ளன ஒவ்வொரு பிரிவிலும் சுமார் ஐம்பது கூடாரங்கள் உள்ளன. ஒவ்வொரு கூடாரத்திலும் மூன்றிலிருந்து பத்துப் பேர் வரை அடங்குவர் எனவே ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இந்தக் கூடாரக்கிராமத்தில் வதிகின்றனர்.

## சுகாதார வசதி

நிர்க்கதிக்குள்ளான இந்த ஆயிரக்கணக்கான மக்களும் பெரியதொரு சுகாதார நெருக்கடியை எதிர்நோக்கிய வண்ணமிருக்கின்றனர். பாம்புகள் மலிந்த பயங்கரக் காடே இவர்களின் மலசலகூடமாகும். கூடார வளவினைச் சுற்றியிருக்கும் காடுகள் ஒரே துர் நெடியாயுள்ளது. இதன் மூலம் நொந்துபோயுள்ள இம் மக்கள் மேலும் நோயையும் சுமக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இது தவிர பெண்களும், ஆண்களுமாகக் காடுகளைச் சுற்றிக்கொண்டிருப்பது பெரிய கண்ணராவி,

## வெயில் கொடுமை

இது ஒருபுறமிருக்க வெயில் கொடுமை மற்றது. விசுவமடுப் பகுதியிலே வெயில் அனலாய்க் கொளுத்துகிறது. காலையிலேயே வெயில் கொடுமை ஆரம்பித்துவிடுகிறது. நிலம் சூடேறி அங்கு நடப்பதும் இருப்பதுமே கஷ்டமாயுள்ளது. மூச்சு வாங்கும் காற்றும் அனலாயிருக்கிறது, வன்செயலால் மனப் புழுங்கிப்போயிருக்கும் இவர்கள் வெயிலிலும் புழுங்கிக் கூடாரங்களில் கிடக்கின்றனர் இதன் மூலமும் அவர்கள் நோய்க்குள்ளாகும் அபாயத்திலுள்ளனர்.

## தண்ணீர்க்காவடி

நீர்வளமிக்க பகுதிகளிலிருந்துவந்தஇவர்கள் தண்ணீருக்குப்படுபாடு வேதனைக்குரியது சிறிய குடுவைகளையும் குடங்களையும் பிளாஸ்டிக் ஏதனங்களையும் கொண்டு பெண்களும் ஆண்களுமாக நீருக்காக அலைகின்றனர்

அண்மையாக இரண்டொரு கிணறுகள் இருக்கின்றன. அவற்றிலேதான் இவர்கள் எல்லோருக்கும் குடிக்கவும் சமைக்கவும் நீர் பெறுகின்ற



திருவள்ளுவர் முன்னேற்றக்கழக அமைப்பாளர் திரு. எஸ். கதிரைவேல் குருசுவாமி சாஸ்திரிகள்.

னர். நெருக்கடி காரணமாகச் சிலர் தொலைவுக்கு நீர்தேடிச் செல்கின்றனர். குளிப்பதற்கு நீரே இல்லை. இலர்கள் செய்த பாபம் போலும் குளத்துநீரை அடைத்துவிட்டார்கள். அதனால் மாணிக்கப்பிள்ளையார் கோவில் 'ஆறு'வற்றிவிட்டது. குளிப்பதற்கு நீரில்லை. இப்போதுள்ள சீதோஷ்ணநிலையில் மனிதன் குளிக்க முழுகாதிருக்க முடியுமா? குளிக்காதிருப்பதாகச் சிலர் சொல்லி வெட்கப்பட்டனர். சிலர் கவலை தெரிவித்தனர். நோய் பரவ இதுவும் ஒரு வாய்ப்பு

## உணவு

விசுவமடுவிலுள்ள பாதிக்கப் பட்ட குடும்பங்கள் உணவு விஷயத்திலும் பெரிதும் இடைஞ்சல்படுகின்றனர். நஷ்டஈடாகக் கிடைத்த பணம் தேவையான பொருட்கள் வாங்கி அப்பவே கரைந்து விட்டதாகவும் வெளியே வேலைசெய்து கூலிப்பணம் பெற்று அரையும் குறையுமாகவே ஜீவனம் நடத்துவதாகவும் ஒருவர் கூறினார்.

தாம் கிளிநொச்சி முகாமிலிருந்தபோது டிசம்பர் முதல் வாரத்தில் ஒரு தடவையும் பின்னர் ஜனவரியில் ஒரு வாரமும் அரசு அரிசி வழங்கியதாகவும் மூன்று மாதகாலத்திற்கு இலவச அரிசி வழங்கப்படுமென்று முன்னர் உறுதியளிக்கப்பட்டதென்றும் என்னிடம் தெரிவித்த கதிரவேல் குருசுவாமி சாஸ்திரிகள் என்பவர் அப்படியானால் மிகுதி அரிசி எங்கே என்று கேட்டார். பின்னர் ஒரு நாள் விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூலம் 'காசு அரிசி' வழங்கப்பட்டதாகவும் ஆனால் அது மனிதன் சாப்பிடுவதற்கே லாயக்கற்றதென்றும் அதிலும் அரைவாசி கழிவுபோய்விடுவதாகவும் சாஸ்திரிகள் சொன்னார். பாதிக்கப்பட்ட இந்த மக்களிடையேயும் சாஸ்திரிகள் குறிப்பிடத்தக்க ஒருவர். முகாம்களிலுள்ளவர்கள் தமது குறைகளைத் தனித்தனியே முறையிட்டு நிவாரணம் காணமுடியாதென்பதையுணர்ந்து பலருடனும் ஆலோசனை செய்து ஒரு சங்கத்தை ஸ்தாபித்தவர் இந்தக் குருசுவாமி சாஸ்திரிகள். விசுவமடுவில் தாம் குடியேறிய பகுதிக்குச் செல்வாபுரம் என்ற பெயர் சூட்டித் தமது சங்கத்திற்குத் திருவள்ளுவர் முன்னேற்றக்கழகம்' என்று பெயர் வைத்துள்ளனர். சங்க மூலம்

(7-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர, நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199. தந்தி: வைரம்

## திரைகடல்

'திரையன்'

வாரா வாரம் இந்தப் பந்தியில் சினிமா பற்றிய ஆக்கபூர்வமான தகவல்கள் தரப்படும். ஈழத்துத் தமிழ்ச் சினிமா, சிங்கள, தமிழ் ஆங்கில பிறமொழிப் படங்கள் பற்றிய விமர்சனக் கண்ணோட்டம் சில அறிவுறுத்தல்கள் ஆலோசனைகள் ஆகியவையே இப்பத்தியின் பிரதான அம்சங்களாகும். 'கிசுகிசு'க்கள் இடம்பெறுது!

### தென்றலும் புயலும் வாடைக்காற்றும்

ஒரே நேரத்தில் இரண்டு ஈழத்துத் தமிழ்த்திரைப் படங்கள் வெளிவரப்போவதாகச் செய்திகள் வந்துள்ளன. ஒன்று 'தென்றலும் புயலும்', மற்றது 'வாடைக்காற்று' பெயரில் கூட உள்ள ஒற்றுமையைக் கவனித்தீர்களா? (ஆமாம் காற்றைவிட்டால் இவர்களுக்கும் பெயரே இல்லையா 'புதிய காற்று')

நமது நாட்டுக்கே உரிய சாபக்கேடு இதுதான். இருந்திருந்து இரண்டு தமிழ்ப்படங்கள் வெளியாகின்றன. அவை இரண்டும் ஒரே நேரத்தில்தானா வெளிவரவேண்டும். அப்படி என்னதான் அவசரம். தமிழகத்தில் புத்தாண்டு, தீபாவளி போன்ற தினங்களில் நான்கைந்து படங்களுக்கு விளம்பரம் செய்யப்படுவது போல், இலங்கையிலும் செய்வதற்கு இலங்கையில் தமிழ்த் திரைப்படத் துறைஅபரிமித அபரித வளர்ச்சியடைந்துவிட்டதா? என்ன?

'பைலட் பிரேம்நாத்' பற்றிய அச்சக்குரல் ஓய்வதற்கு முன்னரே, 'சென்ஸர்' செய்யப்பட்டுள்ள [கைவசம் உள்ள] இரண்டே இரண்டு தமிழ்ப் படங்களையும் ஒரே நேரத்தில் 'ரிலீஸ்' பண்ணவேண்டியதன் அவசியந்தான் என்ன? அவசரந்தான் என்ன? புத்தாண்டு மார்க்கட்டைக் கைப்பற்றுவதா? 'பைலட் பிரேம்நாத்' தினர் எமது திரைப்படங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டுக்கொண்டு, 'டப்பா'வுக்குள் ஓடிச் சென்று பதுங்கிக்கொள்வதைப் பார்த்து எள்ளி நகையாடி ஆத்ம திருப்தி அடைந்துகொள்ள வேண்டுமா என்ன?

இரண்டு திரைப்படங்களினதும் தாரதம்மியம்; தயாரிப்புச் சிறப்பு கலை நுணுக்கம், தொழில் நுட்பம், ஜனரஞ்சகம் என்பவற்றைப் பற்றி இங்கு நான் விமர்சிக்க வரவில்லை! இரண்டு திரைப்படங்களையும் [ஒரே நேரத்தில் ஓடவிடுவதைப் பற்றித்தான் இங்கு குறிப்பிடுகிறேன். இம் மாதம் 31-ம் தேதியே 'தென்றலும் புயலும்' ரிலீஸாவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இரண்டு தயாரிப்பாளர்களும் செய்துகொண்டுள்ள 'கனவான்' ஒப்பந்தத்தின்படி, 'தென்றலும் புயலும்' அடுத்த மாதம் 12 வரை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு நாட்கள்தான் இடைவெளி!

'வாடைக்காற்று' செங்கை ஆழியனின் கதை. ஆனால் சிறந்த நாடகத் தயாரிப்பாளரும் எழுத்தாளருமான கே. எம். வாசகரின் திரைக்கதை வசனத்தில் உருவானது. அது 'வாடைக்காற்றுக்கு' ஒரு சிறப்பு! 'தென்றலும் புயலும் அனுபவத்தில் முதிர்ந்த வமரா நிபுணரான எம். ஏ. கபூரின் ஒளிப்பதிவோடு, அவரது நெறியாள்கையிலும் உருவானது, அது 'தென்றலும் புயலுக்கும் ஒரு சிறப்பு ஏனைய தொழில் நுட்பம் நடிகர் பணி, இசை, எடிட்டிங் முதலியவை வழமைபோல் தான். பெரும்பாலும் புது முகங்கள்தான். இரண்டொரு தமிழ்ப்படங்களில் தோன்றிய நடிகர்களும் தொழில் நுட்பக் கலைஞர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் கதாநாயகர்கள் இருவருக்கும் இதுதான் முதல் படம். (முகம் பழக வேண்டுமே!)

வாடைக்காற்றைப் பற்றி இப்போதே கதைத்துக் கொள்கிறார்கள். ஏ. ஈ. மனோகரன், கே. எஸ். பாலச்சந்திரன், ஜவாகர் போன்றோர் படத்தைக்காப்பாற்றுவார்கள் என்று நம்ப இடமுண்டு. ஏனெனில் இவர்கள் ஜனரஞ்சகமான கலைஞர்கள். தென்றலும் புயலும் கதாநாயகன், தயாரிப்பாளரான டாக்டர்தான். இருந்தாலும் டீன்குமார் போன்றோர் நம்பிக்கை ஊட்டுகிறார்கள். டைரக்டரும் படத்தை ஜனரஞ்சகமாய் கொண்டுபோய் இருக்கிறார். வாடைக்காற்று வாசகருக்காகவும் தென்றலும் புயலும் எம் ஏ. கபூருக்காகவும்தான் ஓடவேண்டும்.'

எமது கேள்வியெல்லாம் இதுதான். 'கனவான் ஒப்பந்தம் செய்துதான் செய்தீர்கள். ஒரு மாதம்வரை இடைவெளி விட்டு இரண்டு படங்களையும் வெளியிட்டிருக்கலாமே! 'ஈழத்து ரசிகர்களும் இரண்டில் ஒன்றைத் தெரிவுசெய்யாமல், இரண்டு படத்தையும் பார்த்திருப்பார்கள்!

---

### ஆவியுலகத் தொடர்பு—23

# ஆவிகளுடன் பேசுபவர்களுக்கு சில அறிவுரைகள்

**வி. ரவிச்சந்திரன்**

மீடியமாக இருப்பவர்களுக்கும், இருக்க விரும்புகிறவர்களுக்கும் விடாமுயற்சி முக்கியமாகவேண்டும். ஓவியத்தில் வல்லவர்கள் ஒரு நாளில் உயர்ந்துவிடுவதில்லை. இசையில் இணையில்லாதவர்கள் இமைக்கும் நேரத்தில் சிறந்துவிடுவதில்லை. பேச்சிலே சூரர்கள் ஏனோதானோவென்று புகழ் பெற்றுவிடுவதில்லை. வீரத் தளபதிகள் விளையாட்டைப் போல் வென்று வாகைசூடுவதில்லை. இடைவிடாத முயற்சியின் காரணமாகத்தான் அவர்கள் இத்தகைய சிறப்பை அடைந்தார்கள். அதேபோல ஒரு சில மணி நேரத்திலோ அல்லது ஒரு நாளிலோ யாரும் சிறந்த மீடியமாக ஆகமுடியாது. தினசரி ஓய்வு நேரங்களில் ஒய்ஜா போர்டில் பேசிப்பழகி வந்தால் நாளடைவில் தான் நல்ல மீடியமாக ஆகமுடியும்.

### முட்டாள்தனமான கேள்விகள்

ஆவிகளிடம் அநாவசியமான கேள்விகளைக் கேட்கக்கூடாது. என் பையில் இருப்பது என்ன? என் வயது என்ன? இதோ இவருடைய பெயர் என்ன? என்பது போன்ற கேள்விகள் தேவையற்றவை. முட்டாள்தனமானவை. முக்கியமாகக் கேலியும் கிண்டலும் அறவே கூடாது. அவர்களைப் புனிதமான இடங்களில் இருக்கும் போதுதான் அழைக்கவேண்டும். படுக்கை அறைபோன்ற இடங்களைத் தவிர்க்கவேண்டும்.

பூவுலகில் நன்மையான காரியங்களைச் செய்து ஆவியுலகில் புண்ணியப் பகுதியில் இடம் பெற்றுள்ளவர்கள் மட்டுமே எதிர்காலம் பற்றிச் சொல்வார்கள். அவர்களிலும் ஒரு சிலர் தான் அதற்கும் மேல் உலகங்களுக்குப் போகும் சக்திபடைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள்தான் சக்திவாய்ந்த ஆவிகள். என்றாலும் அவர்களுக்கும் கட்டுப்பாடுகள் உண்டு எல்லா விஷயத்தையும் எல்லோருக்கும் சொல்லிவிடமுடியாது. சொல்லக் கூடாது. எனவே ஆர்வமுள்ளவர்கள் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் இத்துறையை அணுகினால் அவர்கள் அறிவுக்குப் பல புதிய விஷயங்கள் கிடைக்கும்.

இது இப்படி இருக்க எனக்குப் புதையல் கிடைக்குமா? பரிசுக் குலுக்கலில் எந்த நபருக்குப் பரிசு விழும்? என்பது போன்ற ஆராய்ச்சிக்கும் ஆவியுலகத்தொடர்பு பயன்படுத்தப்படுவதுண்டு. இந்தப்பேராசைச் கேள்விகளுக்குச் சரியாகப் பதில் கிடைக்காததால் வெறுப்புற்று இந்தத் தொடர்பையே கைவிடுபவர்களும் உண்டு. இப்படி மனிதர்களில் பல குணத்தவர்கள் இருப்பது போல ஆவிகளிலும் பல குணத்தவர்கள் இருக்கிறார்கள் என்ற அடிப்படை உண்மையை அறியாதவர்கள்தான் இத்தொடர்பைக் கைவிடுகிறார்கள். எனவே ஆவிகளின் தராதரம் தெரியாமல் எல்லோரிடமும் சோதிடம் கேட்டுக்கொண்டு காலம் கழிக்காதீர்கள்.

### உடல் உள சுத்தம்

மேலும் ஆவியுலகத் தொடர்பு இனிமையாக அமைவதற்கு உடல் சுத்தம் உள்ளச் சுத்தம் இரண்டும் அவசியம். முன்பு சொன்னதையே மீண்டும் சொல்கிறேன். அலுவலகங்களில் வேலைசெய்யும் ஆண்களும், பெண்களும் விடுமுறை தினங்களில் குளிக்காமல் கூட இருப்பதுண்டு. அது போன்ற நேரங்களில் அவர்கள் மீடியமாக இயங்கக்கூடாது. பேச வரும் ஆவிகள் இதைக் குறிப்பிட்டுவிட்டு உடனே பேச்சையும் முடித்துக்கொள்வார்கள் இதுபோல் அடிக்கடி நிகழ்ந்தால் அது ஆவிகளை அவமானப்படுத்துவது போலாகும்.

குறிப்பாகப் பெண்கள் மாதத்தில் தனிக்கு [illegible] மாதவிடாய் தினங்களில் கண்டிப்பாக - கண்டிப்பாக - கண்டிப்பாக இதில் சம்பந்தப்படக் கூடாது, இதனால் அவர்களின் உடல் நலம் பாதிக்கப்படுதோடன்றி-கெட்ட ஆவிகள் தொடர்பும் கிடைக்கப்பெறுவார்கள். அனுபவபூர்வமான உண்மை;

ஆள் மாறாட்டமாகப் பேசும் ஆவிகளும் ஆவியுலகில் உண்டு. இதைப் படித்தவிட்டு யாரும் ஆச்சரியப்படவோ, சிரிக்கவோ வேண்டாம். இது முற்றிலும் உண்மை. ஆவிகளுக்கு ஏற்படுகின்ற ஒருவித மனோவியாதி இது எனலாம். இறந்த பிறகு ஒவ்வொரு ஆவியும் தன் உறவினர்களுடன் பேச வேண்டும் என்று துடிக்கும். ஆனால் அப்படிப் பேச அதற்கு முடிவதில்லை. காரணம் ஆவிகள் நம்மிடம் வந்து மீடியம் இல்லாமல் நேரடியாகப் பேசினால் அதை நாம் உணரமுடிவதில்லை மீடியம் மூலம் பேசவும் எல்லா ஆவிகளுக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை எனவே ஏமாற்றமடைந்த அந்த ஆவிகள் மீடியங்களிடம் அவர்களின் உறவினர்கள் பெயரைச் சொல்லியோ அல்லது புகழ் பெற்ற தலைவர்களின் பெயரைச் சொல்லியோ தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு பேசிவிடும்.

ஆனால் அந்த மீடியத்தின் வழிகாட்டும் ஆவி சக்தியுடையதாக இருந்தால் இந்த ஆள் மாறாட்டத்தைக் காட்டிக் கொடுத்துவிடும், இதுபோல் நேராமல் தடுக்கும். இப்படி ஆள் மாறிப் பேசுவது என்பது எந்தக் கெட்ட நோக்கத்துக்காகவும் நடைபெறுவதில்லை. ஆனால் மீடியமும் மற்றவர்களும் குழப்பமடைந்துவிடுவார்கள். ஆதலால் தன்னிடம் பேசிக்கொண்டிருக்கும் ஆவியைப் பற்றி எந்த மீடியத்திற்கேனும் சந்தேகம் ஏற்பட்டால் அந்த மீடியம் எம்மதத்தவராயினும் சரி, தான் வணங்கும் தெய்வத்தின் படத்தை எதிரில் வைத்து அந்த ஆவியைச் சத்தியம் செய்யச் சொன்னால்-அது எவ்வளவு கெட்ட ஆவியாக இருந்தாலும் சரி உண்மையை ஒப்புக்கொண்டுவிடும் அல்லது உடனே போய்விடும் ஆவியுலகத் தொடர்பை பூசை அறை போன்ற புனிதமான இடங்களில் வைத்துக்கொள்ள வேண்டும் மீடியத்திற்கு ஓரளவாவது கடவுள் பக்தி இருக்க வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்தே நான் வற்புறுத்துவதின் காரணம் இப்போது புரிகிறதா?

இதுவரை கூறிய முறைகளுள் ஒய்ஜா போர்டு முறை-தானாக எழுதும் முறை ஆகியவற்றை மட்டும் வாசகர்கள் ஏற்றுக்கொண்டால் போதும். இவை இரண்டும் சுலபமானவை; பாதுகாப்பானவை. மயக்கநிலைப் பேச்சுக்கு மீடியம் ஆசைப்படக்கூடாது என்பதுஎன் அபிப்பிராயம். ஏனெனில் இம்முறையில் ஒரு ஆவி பேசி முடிந்த பிறகு மீடியத்தின் உடலை விட்டு நீங்கியதும் மீடியத்திற்கு சுயநினைவுவர சில விநாடிகள் ஆகும், அந்த இடைவெளி நேரத்தில் ஏதேனும்கெட்ட ஆவிகள் மீடியத்தின் உடலில் புகுந்துவிட வாய்ப்புண்டு. மேலும் தானாக எழுதும் முறையில் மீடியம் தனியாக இருந்து பேசக்கூடாது. குறைந்தது இரண்டு பேர்களாவது உடன் இருக்கவேண்டும் ஒய்ஜா போர்டிலும் கிண்ணத்தில் இரண்டு பேர் கைவைத்தாலே பாதுகாப்பானது. இதைத் தவிர பின்வரும் சில அறிவுரைகளை வாசகர்கள் எக்காரணத்தைக் கொண்டும் மறக்கக்கூடாது. இவைகளில் சில மீடியம் எனப்படுவது யார்? என்ற பகுதியில் சொல்லப்பட்டதுதான் என்றாலும் அவைகளின் முக்கியத்துவம் கருதி மீண்டும் கூறுகிறேன்.

### ஆதாயமும் ஆனந்தமும்

வெறும் பக்திமட்டும் இருந்துவிட்டால் போதாது; நல்ல உள்ளமும் இருக்கவேண்டும். அதில் நல்ல எண்ணங்களும் இருக்கவேண்டும் சக்திவாய்ந்த ஆவிகளுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர்கள் இந்த அடிப்படைத் தகுதியைத் தங்களிடம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதுபோல நம்முடைய குண நலன்களுக்குப் பொருத்தமான குணமுடைய ஆவிகளே நம்மிடம் தொடர்புகொள்ளும். எனவே நல்ல குணங்கள் மிகுதியாக இருந்தால் நல்லெண்ணமுடைய புண்ணியலோக ஆவிகளின் தொடர்பு நமக்குக் கிட்டும். இல்லையேல் சாதாரண ஆவிகளே நம்மிடம் வந்து பேசும். நல்ல சக்தி வாய்ந்த ஆவியின் தொடர்பு நமக்குக் கிடைத்துவிட்டால் தன்னைப்போன்ற நிலையிலுள்ள பல ஆவிகளை அது நமக்கு அறிமுகப்படுத்தும். அப்படி அறிமுகப்படுத்தப்பட்ட ஆவிகளால் நமக்குக் கிடைக்கும் ஆதாயத்தையும் ஆனந்தத்தையும் அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும் இந்த ஆவி உலகத் தொடர்பின் அருமை.

### ஒரு வேண்டுகோள்

நாங்கள் எங்கள் கடமையைச் செய்துவிட்டோம். இதுவரை சொன்னதை ஏற்றுக்கொள்வதோ ஏற்றுக்கொள்ள மறுப்பதோ உங்கள் விருப்பம். ஆனால் இதைப் படிக்கும் வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள். இக்கட்டுரைத் தொடரைப் படித்த பிறகு முயற்சித்து ஆவிகளுடன் தொடர்பு கொண்டவர்களிடமிருந்தும் - ஏற்கனவே வெற்றிகரமாக ஆவிகளுடன் பேசி வருபவர்களிடமிருந்தும் அவரவர்களின் அனுபவங்களைச் சேகரிக்க விரும்புகிறேன். (தமிழ் நாட்டில் நான் வெளியிட இருக்கும் புத்தகத்தில் உங்கள் அனுபவங்கள் இடம்பெற வாய்ப்புண்டு ] மேற்சொன்னவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்திற்கு எழுதவேண்டுகிறேன். இதுவரை தொடர்ந்து படித்துவந்த வாசகர்களுக்கு எனது நன்றி.

வணக்கம்.

வி. ரவிச்சந்திரன்.
10, அஞ்சல் நிலைய வீதி,
விக்கிரவாண்டி,
தமிழ் நாடு,
இந்தியா. 605. 652

(முற்றும்)



கட்டுரையாளர்

# நாடகமே எனது உயிர்த்துடிப்பு!

## சினிமாநடிகர்டீன்குமார்கூறுகிறார்

தமிழ்-சிங்களத் திரைப படங்களில் நடித்தாலும், நாடகத்தில் நடிப்பதையே பெருமையாகக் கருதுகிறேன். நாடகமே எனது உயிர்த் துடிப்பு. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நாடகத்தில் நடித்துவருகிறேன். நாடக மேடையில் எனது நடிப்பைப் பார்த்துவிட்டுத்தான் என்னைத் திரைப்படத்தில் நடிக்கச் சந்தர்ப்பமளித்தார்கள்.

இவ்வாறு தமிழ்-சிங்களத் திரைப்பட நடிகரும், நாடக மேடையின் முன்னணிநடிகரும் 'புதிய காற்று' திரைப் படத்தின் மூலம் ஈழத் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானவருமான நடிகர் டீன்குமார் 'தெய்வம் தந்த வீடு' படப்பிடிப்புக்காக யாழ்ப்பாணம் வருகை தந்தபோது, 'ஈழநாடு' பத்திரிகைக்காக அளித்த விசேஷ பேட்டியில் தெரிவித்தார்.

''நாடகத்தில் எனது நடிப்பைப் பார்த்துவிட்டுச் சிங்கள நடிகரும், நண்பருமான பெப்டின் பெர்ணான்டோவும், டைரக்டர் சந்திரனும் 'சது அய்யா' (இவளை உள்ளம் படைத்த அண்ணன்' என்ற சிங்களத் திரைப்படத்தில் முக்கியமான கதாநாயகனுக்கு நிகரான பாத்திரமொன்றில் நடிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கினார்கள். இதனை என்னால் என்றுமே மறக்கமுடியாது. சகோதரச் சிங்களத் திரையுலகம்தான் எனக்கு முதல் சந்தர்ப்பம் வழங்கியது. ஆனால் தமிழ்த் திரைப்படமான 'புதிய காற்று' திரையிடப்பட்டுவிட்டது என்றார் டீன்குமார்.

புதிதாகத் தயாரிக்கப்படும் திரைப் படங்களில் நடிக்கிறீர்களா? என்று கேட்டபொழுது,

ஆம், லிபட்டி பிலிம்ஸ் வி. கே. டி. பொன்னுசாமி தயாரிக்கும் —வில்பிரட் சில்வா டைரக்ட் செய்யும் "சினிமாஸ் கோப்" திரைப்படமான "தெய்வம் தந்த வீடு' திரைப்படத்தில் கௌரவ நடிகராக நடிக்கிறேன். "தென்றலும் புயலும்' திரைப் படத்தில் நடித்துள்ளேன் மற்றும் டைரக்டர் சந்திரன் டைரக்ட்செய்யவிருக்கும் புதிய படத்திலும், 'பாட்டாளியின் கூட்டாளி' 'நெஞ்சுக்குநீதி' ஆகிய தமிழ்ப் படங்களிலும், இராசரத்தினம் டைரக்ட் செய்யும் "இத்தத் ஒந்தாய் நங் வெடத் ஒந்தாய்" எஸ். வி. சந்திரன் டைரக்ட் செய்யும் 'சண்டி ரொஸலின்' ஆகிய சிங்களத் திரைப் படங்களிலும் நடிக்கிறேன். அது மாத்திரமல்ல. நான் நடிக்கும் படங்களில் எனது சக கலைஞர்களுக்கும் நடிக்க வாய்ப்பு வாங்கிக்கொடுக்கிறேன்.

### 'பைலட் பிரேம்நாத்' பற்றி...

இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'பைலட் பிரேம்நாத்' படத்தை இலங்கையில் சில கலைஞர்கள் எதிர்க்கிறார்களே? இதைப் பற்றி உங்களின் அபிப்பிராயம் என்ன?

'பைலட் பிரேம்நாத்' படத்தை எதிர்ப்பது அனாவசியமானது. இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பான இந்தத் திரைப்படத்தில் நம் நாட்டுக் கலைஞர்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் நம்மவர்களே. நம் நாட்டுக் கலைஞர்களின் நடிப்பு, தொழில் நுட்பத் திறமை, இந்தியத் தயாரிப்பாளர்களுக்கோ அல்லது டைரக்டர் திருலோகசந்தருக்கோ 'பைலட் பிரேம்நாத்' பாத்திரத்தில் நடிக்கும் நடிகர்திலகம் சிவாஜி கணேசனுக்கோ தெரியாது. ஆனால் இலங்கைத் தயாரிப்பாளர்களுக்கும், டைரக்டர் ஜோ தேவ்ஆனந்துக்கும் நம் நாட்டு, நடிகர்கள் தொழில் நுட்பக் கலைஞர்களின் திறமை நன்கு தெரியும். அப்படியிருந்தும் இவர்கள் நம்மவர்களைப் பற்றிச் சிந்திக்காதபொழுது இந்தியக் கலைஞர்களைக் குறை கூறுவதும் எதிர்ப்புக் குரல் எழுப்புவதும் முட்டாள்தனம். இனி எதிர்காலத்தில், இது போன்ற கூட்டுத் தயாரிப்புகள் உருவாகும்பொழுது நம் நாட்டைச் சேர்ந்தவர்களுக்குச் சமபங்கு உரிமை வழங்க வேண்டும்.

நீங்கள் நடித்த நாடகங்களில் உங்களுக்குப் பிடித்தமானது?

நடிகர் திலகம் நாடகமாக நடித்து, திரைப்படமாக வெளிவந்த 'தங்கப்பதக்கம்' நாடகம், திரைப்படம் வெளிவருவதற்கு முன்னர் அரங்கேற்றப்பட்டபொழுது அந்த நாடகத்தில் நான் நடித்த சிவாஜியின் 'சௌத்திரி' பாத்திரமும், 'அக்கினிப் பூக்கள்' நாடகத்தில் நான் நடித்த தொழிலாளர் தலைவன் சுந்தரம் பாத்திரமும் என் மனதில் என்றும் மறையாத பாத்திரங்கள்.

நாடகத்திலா அல்லது சினிமாவில் நடிப்பதையா அதிகம் விரும்புகிறீர்கள்?

நாடகத்தில் நடிப்பதைத்தான் அதிகமாக விரும்புகின்றேன், நாடகத்தில்தான் ஒரு நடிகன் தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தமுடியும். மக்கள் முன் நடிக்கும் பொழுதுதான் அவன் உண்மையான ஆத்ம திருப்தி அடைகிறான். நாடகம் என்பது நடிகன் சவால். சினிமா என்பது டைரக்டரின் சவால். இந்த இரண்டிலும் இவர்களின் திறமைதான் அதிகமாகப் போற்றப்படும். சினிமா நடிகரைவிட நாடக நடிகர்களுக்கே பத்திரிகை அதிகமாக ஆதரவுதரவேண்டும். கலைஞன் இந் நாட்டின் தேசிய சொத்து.''

# முடிசூடாமன்னன் குமாரசாமி

ஒரு காலத்தில் தென்மராட்சியில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார் - அக் காலத்து எம். பி. திரு. வே. குமாரசாமி.

வள்ளல்களிடம் ஒன்றுவேண்டிச் சென்றோர் வெறுங் கையோடு திரும்புவதில்லை அவ்வாறே எம். பி. குமாரசாமியிடம் சென்றோர் சும்மா திரும்புவதில்லை.

ஒருசமயம் இராஜாஜி "அரசியற் சேறு" என்ற தொடரை உபயோகித்ததுண்டு. அந்த வழுக்கலை இயன்ற அளவு

தென்மராட்சி தன்னைக் கைவிட்டபோது காடுநோக்கி நடந்தார் திரு குமாரசாமி. காடு நாடாகியது திரு குமாரசாமி விவசாய மன்னன் ஆனார். இராமன் இருக்கும் இடம் அயோத்தி.

பூமி திருத்தியுண், சுழன்றும் ஏர் பின்னது உலகு, சீரைத் தேடின் ஏரைத்தேடு - என்ற அமிர்த வாக்கியங்களுக்கு அமைய நடந்து அவற்றை மெய்ப்பித்தார். ஆனால் காலப் போக்கின் கொடுமையை என்னென்பது?

உழுதுண்டு வாழ்வார் என்

## பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை

விலக்கி நான் காலங்கழிப்பதுண்டு.

அப்படியிருந்தும் திரு குமாரசாமித் தமிழன்பன் என்னை இறுகப்பிடித்து விட்டார். தனிப்பட்டமுறையில் அவர் செய்த உதவிகளும், சைவாசிரியர் கலாசாலைக்கு அவர் காட்டிய-வழங்கிய நன்மதிப்பும் என்றென்றும் மறக்கக் கூடியனவல்ல.

ஃ ஃ ஃ

அரசர்கள் நாடு தம்மைக் கைவிட்ட காலத்தில் காடு நோக்கி நடப்பதை இதிகாசங்களில் 'பாண்டவர் வனவாசம், 'ஸ்ரீராமனின் பதினான்கு வருடம்' என்ற தலையங்களிற் படிக்கிறோம்.

பது போய் உழுதுண்டு வாழ்வதற்கும் பழுதுண்டு போலேயும் நேர்கின்றது.

பயன்தருசொற்களை அளந்து பேசுபவர் மதிப்புக்குரிய எம். பி. திரு. நவரத்தினம். அவர் திரு. குமாரசாமியையும் அவரின் அரும்பெரும் சேவைகளையும் பாராட்டி அண்மையில் கூறியவை வெறும் புனைந்துரைகளல்ல, பச்சையான உண்மைகள் அவைகள்.

திரு. குமாரசாமி அவர்கள் இன்னும் வாழவேண்டியவர்கள். சடுதி மறைவு கலக்கம் தருகின்றது.

திரு. வே. குமாரசாமி அவர்களின் ஆத்மா சாந்தியுறுக.

பாடநூலைப் பற்றி ஒரு விமர்சன நோக்கு

# தமிழ்—பாலர் வாசகம்

அரசாங்க வெளியீடாக வெளிவந்துள்ள தமிழ் பாலர் வாசகம் எனது கண்ணில் பட்டது. அதனது அட்டைப் படம் முதலில் என்னைக் கவர்ந்தது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட நூலோ என்று கருதும் அளவிற்கு அதனது கடதாசியின் தரமும் வண்ணங்களும் இருந்தன. 32 பக்கங்களைக்கொண்ட இந்த நூல் நான்கு வண்ணங்களில் அமைந்து சிறுவர் தொட்டு, வளர்ந்தவர்கள் வரை அவர்கள் மனதைக் கவர்ந்து நிற்கிறது: இக்கவர்ச்சியான நூலின் விலை அதிகமாகவிருக்குமென்றே எண்ணினேன்: சிறிது தயக்கத்துடன் விலையைக் கேட்டேன். இரண்டேகால் ரூபா என்றார் கடைக்காரர். உடனும் எழுந்த ஆச்சரியத்தை அடக்கிக்கொண்டு புத்தகத்தை வாங்கிச் சென்றேன் அரசாங்கம் நூல்களின் விலையைக் குறைத்து விற்கும் செய்தி எனது ஞாபகத்திற்கு வந்தது. பாடநூல்கள் இவ்வாறுதான் தரமாகவும் மலிவாகவும் இருக்க வேண்டுமென்று மனமார வாழ்த்தினேன்.

இந் நூலினை மலிவான விலையில் அச்சடித்து வெளியிடும் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன், என்போன்ற தமிழ் அறிந்த சிங்களவர்களையும் தமிழறியாத சிங்களவர்களையும் கவர்ந்த இந்நூலை ஆக்கி வெளியிட்ட எழுத்தாளர், பதிப்பாசிரியர் அனைவரையும் பாராட்டுகிறோம்.

நூலை வீட்டிற்கு எடுத்துச் சென்றேன். தமிழறியாத எனது குழந்தைகளும் அயல் வீட்டுக்குழந்தைகளும் விழுந்தடித்துப் பக்கங்களைப் புரட்டி மகிழ்ந்ததைக் கண்டு இந் நூலைப் பற்றிப் பத்திரிகைக்கு எழுதவேண்டுமென்று எண்ணினேன்.

நூலை ஆர்வத்தோடு நானும் படித்துப் பார்த்தேன். 5 வயதுச் சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் கிரமமாக எழுதப் பட்டிருக்கிறது. சிங்களக்குழந்தைகளுக்கும் தமிழ் படிக்கத் தக்க ஒரு நூலாக இது இருக்குமென்பது எனது அபிப்பிராயம். நூலை ஆக்கியோர் குழந்தையின் வீடு, சுற்றுடல் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதும் குழந்தைகளுக்கு விருப்பமானதுமான பல விடயங்களைப் புகுத்தியிருக்கிறார்கள். ஓவியர்களும் குழந்தைகளின் கற்பனைக்கும் பேச்சுப் பாடத்திற்கும் வேண்டிய அம்சங்களைச் சிறந்த ஓவியமாகத் தீட்டியிருக்கிறார்கள். நூலின் தமிழ் முஸ்லிம் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள் உள்ளீடாக ஒளி விடுகின்றன.

இவற்றிற்கு மேலாக என் மனதைக் கவர்ந்த இரண்டொரு அம்சங்கள் உள. இந் நூலில் வரும் பாடங்களிலும் பாடல்களிலும் சமய ஒற்றுமை தேசிய ஒற்றுமை ஆகிய விடயங்கள் மிக நுண்ணியமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இளஞ் சிறுவர்கள் பிஞ்சுமனத்தில் பசுமரத்தாணி போல் இவை பதியத்தக்கன. அடுத்ததாக, இந்நூலின் மொழிநடையும் கதைக்கோப்பும் இலகுவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பாடல்களில், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்திருக்கிறார்கள். பல்வகையிலும் சிறப்பாக அமைந்த தமிழ் பாலர் வாசகம் எல்லாரதும் பாராட்டைப் பெறுமென்பதில் சந்தேகமில்லை. இந்த இடத்தில் இன ஒற்றுமை, தேசிய ஒற்றுமைக்குரிய விடயங்களைச் சிங்களப் பாலர் வாசகம் கொண்டிருக்கவில்லையென்பது மனவருத்தத்திற்குரிய விடயம். அவ்வாறு அமைத்தால் அந்நூலும் சிறப்பாக இருக்கும். இதனையும் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவர விருக்கிறேன். ஆவன செய்வார்களென எதிர்பார்க்கிறேன்.

தமிழ் பாலர் வாசகம், போன்ற தரமான வேறு நூல்களையும் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும், அரசும் வெளியிடுமென எதிர்பார்ப்போமாக.

இளைப்பாறிய வித்தியாதிபதி
திரு. டி. டி. நாணயக்கார

## என்னைமறந்த அன்னையே!

''கலைவாதி கலீல்''

கருவே தரிக்காமல்
மலடியாய்
நெடுங்காலம்
நிலைத்திருந்த
உன்னை
தாயாய் ஏற்று
பிள்ளையாய் நான் மாறி
உன்
பெயர் நிலைக்கச்
செய்தேன்!
ஆனால்...
என் அன்னையே
இன்று நீ
எவ்வாறோ பெற்ற
குருட்டுத்
தசைக் கட்டியை
"உணர்ச்சிக் கருவூலம்"
என்று
உன் மடியில் கிடத்தித்
தாலாட்டுகிறாய்!
என் அன்னையே!
நான் சொல்கிறேன்
'உன் மடியில் கிடப்பது
குழந்தையல்ல'
உனது உதிரத்தை
'பால்' என்ற
போர்வையில்
உறிஞ்சிக் குடித்து
உன்னை நரகத்து
முன்னாக்கி
தன்னை
சொர்க்கத்துப் பிரபுவாய்
மாற்றிக்கொள்ள
எத்தனங்கள் செய்யும்
நவீன '[illegible]லன்' தான்
அப்பிண்டம்!
நானோ...
உனது பாலையல்ல
பாசத்தை மட்டுமே,
பாலெனப் பருகி...
உனக்காக உயிரையே
இழக்கத்
தயார் நிலையில்
நிற்கிறேன்!...
என் அன்னையே!
என்னை நீ
விட்டு விட்டு...

# புத்தாண்டில்திரைக்குவரும் இரு தமிழ்ப்படங்கள்

(வெள்ளவத்தை நிருபர்)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இரண்டு தமிழ்த்திரைப் படங்கள் தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டு திரைக்கு வர இருக்கின்றது. இந்த இரண்டு திரைப்படங்களில் ஒன்று கமலாலயம்மூவீஸாரின் 'வாடைக் காற்று' மற்றது ராஜேஸ்வரி பிலிம்ஸாரின் 'தென்றலும் புயலும்.'

பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியனால் எழுதப்பட்ட "வாடைக் காற்று" என்ற நாவல் கே. எம். வாசகரின் திரைக்கதை வசனத்தில் மெருகூட்டப்பட்டு, ஏ.வி.எம்.வாசகத்தின் கமிராவைவண்ணத்திலும். டி. எப். லத்தீப்பின் காதுக்கினிய இசையமைப்பிலும், பிரேம்நாத் மொறாயிஸின் நெறியாள்கையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுகாலவரை தயாரிக்கப்பட்டுள்ள திரைப் படங்களில் தனித்துவமுள்ளதாக 'வாடைக் காற்று' திகழும் என்பதில் ஐயமில்லை.

''வாடைக்காற்று'' திரைப் படத்தில் ஏ. ஈ. மனோகரன், டாக்டர் இந்திரகுமார், சந்திரகலா, ஆனந்தராணி, கே. எஸ். பாலச்சந்திரன், கே. ஏ. ஜவாஹர், எஸ். ஜேசுரட்ணம், ஏ. பிரான்சிஸ், ஜெயதேவி, நடிகவேள் லடீஸ் வீரமணி ஆகியோர் நடித்துள்ளனர். வானொலி புகழ் முத்தழகு, சுஜாதா, ஜோசப் ராஜேந்திரன் ஆகியோர் பின்னணி பாடியுள்ளனர்.

செங்கை ஆழியனின் நாவலான "வாடைக் காற்றை" தத்ரூபமாக திரைக்குக் கொண்டுவருகிறார்கள் கமலாலயம் மூவீஸார்.

புத்தாண்டின் மற்றொரு திரைவிருந்தான எஸ். ஆர். வேதநாயகத்தின் கதை வசனத்தில் உருவாகியுள்ள "தென்றலும் புயலும்' நல்ல கதையம்சத்துடன் கூடிய கலைப் படைப்பு.

''தென்றலும் புயலும்'' திரைப்படத்தில் தமிழ் - சிங்களத்திரையுலகின் நட்சத்திர நடிகரான டீன்குமார் கௌரவ பாத்திரத்தில் நடிக்கிறார். மற்றும் ஹெலன் குமாரி, சந்திரகலா, கே. ஏ. ஜவாஹர், எஸ். என். தனரத்தினம், டாக்டர் சிவபாதவிருதையர். அமரசிங்கம் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

மேற்படி திரைப்படத்தின் பாடல்களை சண்முகப்பிரியாவும், இசையை திருமலை பத்மநாதனும் உதவி டைரக்ஷனை பி. எஸ். நாகலிங்கமும், படத்தொகுப்பை எம். எஸ். அலிமானும், ஒளிப்பதிவு டைரக்ஷன் ஆகிய பொறுப்புகளை எம். ஏ. கபூர் ஆகியோரும் ஏற்றுள்ளார்கள். "வாடைக் காற்று,' "தென்றலும் புயலும்' ஆகிய இரு திரைப்படங்களும் இத்திரைப் புத்தாண்டில் திரைவிருந்தாக வெளிவரவிருக்கிறது. இந்த இரு திரைப் படங்களும் எத்தனையசாதனைகளைச் செய்யப்போகின்றன என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம்: ஜி. ஆர்:—வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன்...லீலா...எம். ஆர். ராதா...நாகேஷ்...மனோரமா
நாகமலை அழகி — புதிய பிரதி —
நடனங்கள் கலரில்
மந்திரஜாலங்கள், சண்டைகள் நிறைந்த படம்
ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
SEA FARING DOG

கடைசி வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா நடித்த
பணக்கார பெண்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த இன்று மட்டும்
அரசகட்டளை
நாளை முதல் ஜெமினி—சாவித்திரி
கொஞ்சும் சலங்கை
(டெக்னிக் கலர்)

Rio Jaffna (Phone:7607)
Daily 10-30 a. m. 4-45. 7-00 and 9-45 p.m
Elizabeth, Ashley, Joe, Don Baker, JimKelly
in
GOLDEN NEEDLES
(ஒரு பெண்ணின் கராட்டிச் சண்டை பிரமாதம்)
Color (Advance Booking for Families Accepted) Scope

வின்ஸா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார்-நிர்மலா, அசோகன், மனோரமா
நடித்த
K. R. G. பிக்சர்ஸ்
ஜானகி சபதம்

Regal (Jaffna) Daily 4-30, 7-00 and 9-30 p.m.
Starring Three of the World's Most Popular Actors
MICHAEL CAINE, DONALD SUTHERLAND, ROBERT DUVALL
Daring attempt by a group of German Paratroopers to Kidnap Britain's Wartime Prime Minister, Winston Churchill
THE EAGLE HAS LANDED
(Color-War film)

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ (யாழ்.நகர்) போன் 7698
முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்


# இரத்தினக்கல்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

னோர் கூறிய அனுபவ ரீதியான பல கூற்றுக்களில் எத்துணை உண்மைகள் பொதிந்துள்ளன என்பது புலனாகும். நமது வேத நூல்களும் பண்டைய சாத்திரங்களும் இரத்தினக் கற்களின் சிறப்புக்களை நன்கு விளக்கிக் கூறியுள்ளன. சோதிடம், முகூர்த்த சிந்தாமணி, இந்திரமாலை (வானசாத்திர நூல்), ஆயுர்வேதம், முதலியவற்றிலும் பைபிள், திருக்குரான் போன்ற சமய நூல்கள் போன்றவற்றிலும் இதுபற்றிய சிறப்புக்கள் நன்கு கூறப்பட்டுள்ளன.

## கற்களின் வகை

இரத்தினக்கல் என்பது பூமி, கடல் ஆகிய இரு பகுதிகளில் இருந்தும் பெறப்படும் அரிய கற்களுக்குரிய பொதுப் பெயராகும். நவரத்தினம் என்பது அவற்றுள் நம் முன்னோரால் தெரிவுசெய்து எடுக்கப்பட்ட ஒன்பதுவகையான இரத்தினக் கற்களுக்கு உரிய பெயர். வைரம், மாணிக்கம், மரகதம், வைடூரியம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், பவளம், முத்து என்ற இக்கற்கள் நவக்கிரகங்களுக்கு பிரீதியானவாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கனிப்பொருட்களிலாலான (Minerals) இவ்விரத்தினக்கற்கள் பூமியின் மேற்பரப்பிலும் பூமியின் அடியிலும் காணப்படுகின்றன. ஏறக்குறைய 2000 வகையான கனிப்பொருட்களில் 100 வகையான கனிப்பொருட்களை இரத்தினக் கற்களாகப் பாவிக்க முடியுமென விஞ்ஞான ரீதியில் தெரிவு செய்துள்ளார்கள். உதாரணமாக வைரம், நீலம், வைடூரியம், மரகதம் என்பன.

இவற்றைவிட கடலிலிருந்து பெறப்படும் அசேதன உறுப்பு இரசாயனப் பொருட்களால் உருவாக்கப்பட்ட முத்து, பவளம், அம்பர் என்ற இரத்தினக்கற்களும் முக்கியமானவையே.

## கற்களின் தன்மை

பூமியில் கிடைக்கும் இரத்தினக் கற்களின் தன்மையை ஆராயும்போது பல வியத்தகு உண்மைகள் புலனாகும். இவற்றிற்கு தலையாயது வைரம். மிகவும் கடினமான இதன் மூலப்பொருள் தனிக்கரியாகும். அதாவது கரியின் ஒரு திரிபு தான் வைரம். ஏனைய கற்கள் பல இரசாயன மூலகங்களால் ஆக்கப்படுகின்றன. உலோக ஒட்சைட்டுக்கள், உலோக சல்கேற்றுக்கள், உலோக சிலிகேட்டுக்கள் போன்றவையாக இருக்கும்.

உதாரணமாக நீல மணிக் கல்லின் மூலப்பொருள் அலுமீனியம் ஒட்சைட்டு ஆகும். சுத்தமான நிலையில் நிறம் வெள்ளை. அலுமீனியம் ஒட்சைட்டு நிலத்தில் உருவாகும்போது தற்செயலாக அழுக்குப்போன்று சேர்ந்துகொள்ளும். சிறிதளவு டைட்டேனியம் ஒட்சைட்டு என்ற மூலப் பொருளே அந்த நீல நிறத்தைக் கொடுக்கின்றது. இதேபோல அதே அலுமீனிய ஒட்சைட்டுக்கள் சேர்ந்து கொள்ளும் குரோமியம் ஒட்சைட்டே சிவப்பு (மாணிக்கம்) நிறத்தைக் கொடுக்கின்றது. வேறுவேறு உலோக ஒட்சைட்டுக்கள் சேர்ந்து மஞ்சள் (புஷ்பராகம்), பச்சை, இளம் சிவப்பு (பத்மராகம்) முதலிய கற்களைக் கொடுக்கின்றன. இவையெல்லாம் மூலமாகிய அலுமீனியம் ஒட்சைட்டைக் கொண்டிருப்பதால் அவற்றின் முக்கிய இரசாயன, பௌதீகத்தன்மைகள் யாவும் ஒன்றாகவே இருக்கும். அதாவது அடர்த்தி, கடினத்தன்மை, ஒளி முறிவுக் குணகம் என்பன. இவையெல்லாவற்றையும் சேர்த்து ஒரு குடும்பம் என்று வகுக்கப்பட்டுள்ளது. இதை ஆங்கிலத்தில் கொறண்டம் (Corundum) என்று சொல்வார்கள்.

இதேபோல இரத்தினக் கற்களில் பல குடும்பங்கள் இருக்கின்றன. வெவ்வேறு இரசாயன மூலகங்களால் ஆன இவை சேர்வைகளுக்கேற்றவாறு வெவ்வேறு நிறங்களையும் தன்மைகளையும் கொண்டவையாக இருக்கும். மரகதம் (பச்சை), அக்குவறின் (நீலம்) இவை (Beryl) என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவையாகும். வைடூரியம், (பச்சை, மஞ்சள்) பசுங்கல் (அலெக்சாண்ரைட்டு) என்பன கிறைசோபெறில் (Chrysoberyl) என்ற குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

(அடுத்த வாரம் மிகுதி)

# ஜீவனுள்ள..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்குமுன் நடந்த சரித்திர சம்பவமாக மட்டுமல்ல: யுக முடிவு பரியந்தம், நம்மோடு கூடி வாழும் கடவுளாக- அவர் மாறிவிட்டார், அவர் வாழ்க்கையிலே கூடி வாழும் கடவுள், வழியிலே கூடி வரும் கடவுள். அவர் உயிர்த்தெழுந்து கூடிவாழ்ந்து, கூடி நடந்தும் முன் நடந்தும் வருபவரானமையால் அவரைத் தள்ளிவிடவோ, அசட்டை செய்யவோ, மறுக்கவோ எவராலும் முடியாது.

இதோ யுக முடிவு பரியந்தம் நான் உங்களோடுகூட இருக்கிறேன் என்றும், நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன் என்னும் உரிமையோடு உங்களை அழைக்கும் ஜீவனுள்ள கிறிஸ்து ஆண்டவர், உன் வாழ்க்கையிலே உன்னைச் சந்தித்து உனக்கு வேண்டிய ஆறுதலையும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும், ஈடேற்றத்தையும் அருளுவாராக.

# வெயிலிலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது குறைகளை மேலிடத்திற்கு எடுத்துச் சொல்லி நிவாரணம் பெற்றும், பெற முயன்றும் வருகின்றனர். உதாரணமாக ஆரம்பத்தில் இவர்களுக்குக் குடும்பத்திற்கொரு பிளாங்கட்டும் ஒரு திரைத்துணியும் கொடுத்தனராம். இவை போதாதென்று குரலெழுப்பப் பட்டதைத் தொடர்ந்து மீண்டும் படுக்கை விரிப்புக்கள் விகிதாசாரப்படி வழங்கப்பட்டதாம் எனினும் அதிலும் சீர்கேடு இருப்பதாகக் குருசுவாமி சாஸ்திரிகள் கூறினார். கேட்டால், 'அது அப்படித்தான்' என்கிறார்களாம்.

## விருந்தோம்புதலில் சிறந்தவர்கள்

உணவு விஷயத்தில் இவர்கள் கஷ்டப்பட்டபோதிலும் செல்விருந்து ஓம்பி வருவிருந்து காக்கும் பண்பாளர். தங்களுடன் கிளிநொச்சி முகாமிலிருந்த வேறு பதினாறு குடும்பங்களும் செல்வாபுரத்துக்கு வந்துள்ளதாகவும் அவர்களது உறவினர்களே அவர்களையும் பராமரித்துவருவதாகவும் அவர்களுக்கும் விவசாயம்செய்வதற்குக் காணி தேவைப்படுவதாகவும் சாஸ்திரிகள் சொன்னார்.

தொண்டர் கந்தசாமி என்பவர்தான் என்னை சாஸ்திரிகளிடம் அழைத்துச்சென்றிருந்தார் சாஸ்திரிகள் திருவள்ளுவர் முன்னேற்றக்கழக அமைப்பாளரும் பொருளாளருமாவர்

தமது சிறிய கூடாரத்திற்கு முன்பாகச் சிறிய தலைவாயில் ஒன்று போட்டுள்ளார். பக்கத்திலே சின்னஞ்சிறிய குசினி. குடும்பம் பெரியது. காலையிலே பாண் சாப்பாடு. என்னை அறிமுகம் செய்துவைத்ததும் உபசரித்து திடீர்க்கறி சமைத்துச் சாப்பாடு தந்தனர். ருசியாயிருந்தது. அந்தச் சிறிய 'வீட்டு' முற்றத்தில் சிறிய ஒரு தோட்டம். நான்கைந்து வெண்டைமரங்கள், கொஞ்சம் மிளகாய்ப் பயிர், கத்தரி இரண்டுமூன்று. இப்படி...

இக்குடியேற்ற வாசிகள் அத்தனைபேரும் முன்னர் அதிகம் கஷ்டப்படாதவர்களாக வே தோன்றியபோதிலும் கஷ்ட வேலைக்குத்தம்மைத் தயாராக்கிக் கொண்டிருப்பதை இங்கு எல்லாச் சின்னமுற்றங்களிலும் காணப்படும் "தோட்டங்கள்" நிரூபிக்கின்றன. இவர்களில் அநேகரும் தாம் பிறந்து தவழ்ந்துவிளையாடி, மகிழ்ந்த மண்ணையே மறந்து, விசுவமடு மண் பிசைந்து பொன் விளைக்கும் ஆவல் கொண்டவர்கள். ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் வாழமுடிந்தாலும் தம் தமிழ்ச் சகோதரர்களுடன் கூடி வாழமுடியாதோ என்னும் அச்சம் அல்லலுற்று ஆற்றாது இங்கு வந்து தஞ்சமடைந்துள்ள அப்பாவி மக்களின் மனதைக் கப்பிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாயிருந்தது. இது மிக்க வேதனை தரும் ஒரு விஷயமாகும்.

(தொடரும்)


2-வது வாரம்
புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45, சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந்த் - ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

வெல்லி (சாவிப்போலி)
தினசரி: 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30
கணேசன்—சுபாஷினி
நான் உங்கள் தோழன்

நாகம்ஸ் (கன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நினைத்ததை முடிப்பவன்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் இன்று மட்டும்
சிவாஜி சாவித்திரி நடித்த
குறவஞ்சி (புதிய பிரதி)
27-3-78 முதல் ஜெமினி. கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த
சின்னஞ்சிறு உலகம்

புத்தாண்டு வெளியீடு யாழ். லிடோவில்
தென்றலும் புயலும்

# பணியைத் தொடரவே இறைவன் காப்பாற்றினர்

## கார் விபத்துபற்றி 'அமிர்'

[சுழிபுரம்]

"மக்களுக்காக தொடர்ந்து பணிபுரிவதற்கு என்னை இறைவன் பணித்துள்ளார் என்பதையே அண்மையில் நடந்த விபத்தில் எதுவித காயமுமின்றி நாங்கள் தப்பிய நிகழ்ச்சியிலிருந்து நான் உணர்ந்து கொள்கிறேன்.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினர். அண்மையில் சங்கானையில் தாம் பிரயாணம் செய்த கார் விபத்துக்குள்ளாகிக் குடைசாய்ந்த சம்பவம்பற்றி குறிப்பிடுகையிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறினர்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலத்தில் நடந்த பெற்றோர் ஆசிரியர் தின விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் அந்த விபத்துப்பற்றிகுறிப்பிட்டார்.

அவர் கூறியதாவது:

"நான் எங்கு சென்றாலும் மக்களின் அன்பும் ஆதரவும் எனக்கு நிறைய இருக்கின்றது. ஆதலால்தான் இறைவன் என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றார் சென்ற புதன் இரவு நடைபெற்ற விபத்திலிருந்து தப்பிக்கொண்டதை எண்ணும்போது பெரிய ஆபத்திலிருந்து காக்கப்பட்டதாகவே கருதுகிறேன். நான் தொடர்ந்து பணிபுரிவதற்காகவே இறைவன் என்னைக் காப்பாற்றியுள்ளதாகக் கருதுகிறேன். இச்சம்பவம் எனது வாழ்வில் மறக்கமுடியாத மைல்கல்லாக அமைந்துள்ளது. நாம் எவ்வித காயமும் இல்லாது தப்பிக்கொண்டது அதிசயமாகும். எமக்கு ஏற்பட்ட துன்பத்தை அறிந்து கேட்டு ஓடோடி வந்த அன்புள்ளங்களின் அனுதாபத்தை எனக்கு எப்படி சொல்லில் கூறுவது என்றே தெரியவில்லை.

வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் பெற்றோர் தினவிழா நடைபெற்றது இவ் வைபவத்தில் விசேட விருந்தினராக வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. த. திருநாவுக்கரசு தம்பதிகள், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தம்பதிகள், வட்டாரக் கல்வி அதிகாரி ப. சண்முகராசா, சட்டத்தரணி சி. வரதராசா, பண்டிதர் தி. பொன்னம்பலம், ஆசிரியர் மு. சுப்பிரமணியம், எஸ். சுப்பையா ஆகியோர் உட்பட மற்றும் பலர் பேசினர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## காவலூர் ஜெகநாதனுக்கு இரு தங்கப் பதக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட இரு இலக்கியப் போட்டிகளில் காவலூர் எஸ். ஜெகநாதனின் படைப்புக்கள் முதலாமிடங்களைப் பெற்று இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்டன.

கொழும்பு வளாக தமிழ்ச்சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் "விடிவை நோக்கி" என்ற சிறுகதையும் 'செவ்வந்தி' சஞ்சிகை நடாத்திய குறுநாவல் போட்டியில் 'எரிமலைகள் குமுறுகின்றன' என்ற குறுநாவலுமே முதலிடங்களைப் பெற்ற ஆக்கங்களாகும்.

செவ்வந்தி நடாத்திய சிறுகதைப் போட்டியிலும் இவரது சிறுகதை முதற்தரமான கதைகளில் ஒன்றாக தேர்வு பெற்றது. கடந்த வருடம் தொழிற்திணைக்கள தமிழ்க்கழகம் நடாத்திய போட்டியில் தங்கப்பதக்கத்தையும் இலங்கை கலாச்சாரப் பேரவை நடாத்திய போட்டியில் முதற்பரிசாக ரொக்கப் பணத்தையும் இவரது சிறுகதைகள் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வகுப்புக்கள்

புதிய, பழைய பாடத்திட்ட G. C. E. (O/L. A/L) வர்த்தக, கலை, விஞ்ஞான, காலை, மாலை, முழுநேர வகுப்புக்கள் 1-4-78 ல் ஆரம்பமாகின்றன. கடந்த ஆண்டு 98% மான மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர். மாணவர்களுக்கு விடுதி வசதியுண்டு. விக்ரு ரியூசன் சென்ரர், (ஸ்ரீதர் தியேட்டர், நாகவிகாரைக்கு மத்தியில்) 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 8875

## புதிய சஞ்சிகை வெளியீட்டாளருக்கு பேராசிரியர் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

"புதிய சஞ்சிகையை வெளியிடு முன்பு, சஞ்சிகையில் இடம்பெறும் கட்டுரைகள், வாசகர் மனதில் வெறுப் புணர்ச்சியைத் தூண்டாத வகையில், கருத்துச் செறிவும் தேவையற்ற விஷயங்களைப் புகுத்தலைதடுப்பதாகவும் அமைவதை வெளியீட்டாளர் மிக அவதானமாகக் கவனிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமே காலத்தால் அழியாத சஞ்சிகைகளை வெளியிட முடியும்."

இவ்வாறு யாழ்ப்பாண வளாகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. சண்முகதாஸ், நேற்றுமுன் தினம்யாழ். நகரில் நடைபெற்ற நற்பணி இயக்கத்தின் வெளியீடான 'நற்பணி' சஞ்சிகை வெளியீட்டு ஆலோசனைக் கூட்டத்தில் கூறினர்.

இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த பேராசிரியர் சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் "இம்முயற்சி நல்லமுறையில் வெற்றிபெற கல்விமான்களின் ஒத்துழைப்பைப் பெற்று தருவதாக உறுதியளித்தார்"

விரிவுரையாளர் திரு. ஆ. சிவனேசசெல்வன் உரையாற்றுகையில், மாணவர்களுக்காக குறைந்தளவு சஞ்சிகைகளே தற்போது வெளிவருகின்றன. என்றும் 'நற்பணி' முற்றிலும் மாணவர் சமுதாயத்துக்கு சேவையாற்றுவதுடன் யாழ்குடா நாட்டின் பொருளாதார வளங்களை வெளிக்கொணரும் முயற்சியில் கட்டுரைகளை வெளியிடவேண்டும்" என்றும் கூறினர்.

கூட்டத்ததில் கவிஞர் காரை, சுந்தரம்பிள்ளை, திரு வி. சத்தியகுமாரன், நற்பணி அமைப்பாளர் திரு த. சிவஞானரஞ்சன் உட்படப் பலர் உரையாற்றினர், (கே-இ)

## எந்தவொரு மொழியும்—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வும் இடம்பெற மாட்டாது.

### சமசம்பளம்

எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான உரிமைகளும் சமய, பால், இன, மொழி வேறுபாடின்றிச் சமவேலைக்குச் சமமான சம்பளமும் உறுதிப் படுத்தப்படும்,

### குல வேறுபாடு ஒழிப்பு

ஒரு இனத்தவர் இன்னோர் இனத்தவரை சமூகரீதியாகத் துன்புறுத்துவது அல்லது ஒரு குலத்தவர் இன்னொரு குலத்தவரை சமூகரீதியாகத் துன்புறுத்துவது இன வேறுபாடு குல வேறுபாடு என்பன ஒழிக்கப்படுவதோடு இதனை மீறுவோருக்கு எதிராகச்சட்டரீதியான தண்டனை வழங்கப் படும்,

### இந்தியத் தமிழர்

இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குச் செல்வதும், இங்கு இலங்கைப் பிரஜா உரிமை பெறுவதும் அவர்களது விருப்புக்கு ஏற்ப நிறைவேற்றப்படும்.

இலங்கைப் பிரஜா உரிமை பெற்றுள்ள இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் எல்லா உரிமைகளும் உறுதிப் படுத்தப்படும்

### மத உரிமை

மதசார்பற்றதாக அரசு இருக்கும் அதே நேரத்தில் ஒவ்வொருவரும் தாம் விரும்பும் சமயத்தைப் பின்பற்றுவதற்குரிய உரிமை உறுதிப்படுத்தப்படும். சமய காரணங்களுக்காக வேறுபாடுகள் காட்டப்படுவது தடைசெய்யப்படும்

சமய ஸ்தாபனங்களுக்கு எல்லாவித சமய நடவடிக்கைகளையும் நிறைவேற்றும் சுதந்திரம் வழங்கப்படுவதோடு அரசாங்கம் அவற்றில் தலையிடவோ அன்றி நடைசெய்யவோ மாட்டாது.

### கல்விப் போதனை

தேசிய மொழிகளான சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பதற்கு அனைவருக்கும் தேவையான எல்லா வசதிகளும் வழங்கப் படும்.

### தரப்படுத்தல் இல்லை

பல்கலைக்கல்வி, அதற்காகத் தகுதி பெறும் அனைவருக்கும் வழங்கப்படும் சமுதாயத்தின் தேவைகளுக்குப் பயன்படும் வகையில் அது திட்டமிடப் படும்

# இந்த ஊழியருக்கு

## சம்பள சபை

(கொழும்பு)

பட்டிக், உடைதயாரித்தல், நெசவு ஆகிய துறைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளங்களை நிர்ணயிப்பதற்காக சம்பள சபை ஒன்று அமைக்கப்படும்.

இத்தகவலைதொழில் அமைச்சர் காப்டன் செனிவிரத்ன சதரிவித்தார்.

மேற்படி துறைகளில் பணிபுரிபவர்கள் அநேகர் பெண்களாய் இருப்பதால் அவர்களுக்கு குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது என்றும் இதன் காரணமாக சம்பள சபை அமைக்கப்படும் என்றும் காப்டன் செனிவிரத்ன தெரிவித்தார்.

சம்பளசபை அமைக்கும் பட்சத்தில் இத்துறைகளில் பணிபுரியும் 5 ஆயிரம் ஊழியர்கள் இதனுல் பயன்பெறுவர் என்றும் அவர் கூறினர். (இ)

## வில்லிபாரதம் பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதி ஸ்ரீ நாச்சிஅம்மன்கோவிலில் நடைபெற்றுவரும் வில்லிபாரதம் 15 நாள் தொடர்விரிவுரை இன்று தர்மர் பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாகின்றது. மேற்படி விரிவுரையை பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவருகிறர். அன்னருக்கு பொற்கிழி வழங்கி பொன்னுடை போர்த்தி கௌரவமும் அளிக்கப்படும். (அ)

## யாழ். மாவட்டத்தில் 50 % அரிசிப்புத்தகங்கள் எடுக்கப்படும்?

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்டத்தில் 50 வீதமான அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள் எடுக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது

இதன்படி 30ம் இலக்கப் புதிய தொடர்ச்சிப் பங்கீட்டுப் புத்தகம் 50 வீதமானவர்களுக்கே கிடைக்கலாம். சகல உதவி அரசாங்க அதிபர்களின் இறுதி அறிக்கைகள் இம்மாதம் 28ந் திகதி கிடைத்துவிடும்.

யாழ். மாவட்டத்தில் 38 வீதமான பங்கீட்டுப் புத்தகங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 12 வீதமான கூப்பன் புத்தகங்கள் விசாரணையில் இருக்கின்றன. இது சம்பந்தமான விசாரணைகள் இம்மாதம் 25ம் தேதி வரை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் அலுவலகங்களில் நடைபெறுகின்றன. இவ்விசாரணைகள் முடிவடைந்ததும் எஞ்சிய புத்தகங்கள் பாவனைக்கு விடப்படும்.

30ம் இலக்கப் புதிய தொடர்ச்சிக் கூப்பன் புத்தகங்களை மே மாதம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகயாழ்ப்பாண மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. ஏ. எஸ். ஆனந்தன் தெரிவித்தார்.

யாழ். வட்டத்தில் சுமார் 60 வீதமான பங்கீட்டரிசிபுத்தகங்கள் நடைமுறையிலிருக்கும் என்றும் தெரியவருகிறது. இது சம்பந்தமான நடவடிக்கைகளில் உதவி அரசாங்க அதிபர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## இளந்தென்றல் கலைவிழா

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத் தமிழ்ச் சங்கத்தின் 53-வது இளந்தென்றல் கலைவிழா இன்று காலை 8-30 மணிக்கு வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெறுகிறது. இக்கலைவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியான அரங்கக் கருத்தரங்கில் திருவாளர்கள் வ. நவரத்தினம், செ. குமாரசூரியர். சண்முகதாசன், ஜனுப் மசூர் மௌலானு, சி. கதிரவேலுப்பிள்ளை ஆகியோர்பங்கு பற்றுகின்றனர். (கி)

## இன்று கிறீஸ்தவ பஜனை

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை சுன்னுகம் கிறீஸ்தவ சேவா ஆச்சிரம சங்கத்தினர் திறந்தவெளி அரங்கில் கிறீஸ்து உயிர்ப்பு விழாவையொட்டி பஜனைசெய்கின்றர்கள். [இ]

## பூட்டோ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளார். பேகம் பூட்டோவின் இந்தக் குற்றச்சாட்டு வெறும் அபத்தமாகும் என்று இறை அதிகாரி ஒருவர் இன்று தெரிவித்தார்.

ஜனுப் பூட்டோவுக்கு மன்னிப்பு அளிக்கும்படி ஐ நா. பொதுச் செயலாளர் டாக்டர் வால்ட் ஹெய்மும் வேறு பல உலகத்தலைவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனுப் பூட்டோவுக்கு புகலிடம் அளிக்கத்தயாராய் இருப்பதாக துருக்கி பிரதம மந்திரி அறிவித்துள்ளார்.

## தமிழர் பிரச்னை பற்றி புத்தகம்

இவர் சிறையில் இருக்கும் போது தமிழர் பிரச்னைகள் பற்றி 'மார்க்ஸிய கண்ணோட்டத்தில் தேசிய பிரச்னைகள்' என்னும் நூலை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது அந்நூல் இப்பொழுது தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுவருகிறது. விரைவில் வெளியிடப் படும் (இ)

## இராமநாதன் நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

சேர் பொன். இராமநாதன் தொகுதி IIன் வெளியீடு ஏப்பிரல் 2ம் நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 5-30க்கு நடைபெறும்.

இவ்விழாவில் முன்னுள் முதன்மை நீதியரசர் திரு. சல்சோனி உட்பட பல அறிஞர்கள் உரைநிகழ்த்துகிருர்கள்

மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படும் இவ்விழாவில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அமிர் அனுதாபம்

(சுளிபுரம்)

திராவிடக் கழகத்தலைவர் ஈ வெ.ரா மணிஅம்மையாரின் மறைவுகுறித்து தமிழர் விடுதலைக்கூட்டணியின் சார்பாகவும், தமிழ்மக்கள் சார்பாகவும் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவருமான திரு. அமிர்தலிங்கம் அனுதாபத் தந்தியொன்றை தமிழ்நாடு திராவிடக் கழகத் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தார்.

[illegible] ஈழநாடு. லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389, Registered as a Newspaper in Srilanka